Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 07 சனிக்கிழமை (23.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 054

## அமெரிக்க உதவி இலங்கைக்கு; இன நல்லிணக்கத்தை உருவாக்க

(வொசிங்டன்)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா எப்போதும் இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கும் என்று தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச்செயலராக, நிஷா தேசாய் பிஸ்வால் ·இப்போது புதிதாக பதவியேற்றுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் வொசிங்டனில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி முன்பாக பதவியேற்றுக் கொண்டார்.

தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலராகப் பதவியேற்ற பின்னர், நிஷா



தேசாய் பிஸ்வால் உரையாற்றிய போது, சிறிலங்காவில் போருக்குப் பின்னர் சமூகங்களிடையே, நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா ஆதரவளிக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாய்மொழியில் பொலிஸ்முறைப்பாடு தடை ஏதும் இல்லை



(யாழ்ப்பாணம்)

ஒவ்வொருவரும் தமது தாய்மொழியிலே இலங்கையின் எப்பாகத்திலும் உள்ள பொலிஸ்நிலையங்களில் முறையிடமுடியும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.ஆனந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலும் சரி, மாத்தளையானாலும் சரி ஒருவர் தனது தாய் மொழியில் பொலிஸ் நிலையங்களில் தமது முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும். தற்போதுதான் நாட்டில் சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மொழியில் முறையிடுவதில் தற்போது சிறி சிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் விரைவில் இதற்கு சுமுகமான தீர்வு கிடைக்கும் ஆயினும் தற்போது

19 ஆம் பக்கம் பார்க்க

# கமரூனின் அணுகுமுறை தவறு; ஏற்றுக்கொள்ளாது இந்தியா

## "எக்கொணமிக்ரைம்ஸ்" சாடல்

(புதுடில்லி)

இலங்கையின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் அணுகுமுறையை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி எக்கொனமிக்ரைம்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பிரிட்டன் பிரமதமர் இலங்கைக்கு சென்று அங்கு மெற்கொண்ட நடவடிக்கைகளை இந்தியா விரும்பவில்லை இவ்வாறான செயற்பாடு இந்திய பாணியும் அல்ல. இது முரண்பாடுகளையே ஏற்படுத்தும் அத்துடன் இந்தியாவின் பேச்சு வார்த்தை மூலமான நடைமுறைகளையும் பாதிக்கும்.

அத்துடன் வெளியுறவு அமைச்சு சல்மான்குர்ஷித் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டிற்கு சென்றமையானது இலங்கை பற்றிய இந்தியாவின் அக்கறையின் வெளிப்பாடாகும்.

இலங்கையுடனான இரு தரப்பு உறவுகளில் எவ்வித விரிசலும் கிடையாது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான ராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் பொது நலவாய மாநாட்டில் பிரதமர்

19 ஆம் பக்கம் பார்க்க

## தங்க இறக்குமதிக்கு குறைகிறது தீர்வை

(கொழும்பு)

தங்கத்துக்கான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டுள்ளது. 10 சதவீதமாகக் காணப்பட்ட தங்கத்துக்கான இறக்குமதி தீர்வை 7.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது வரவு - செலவுத் திட்டத்தில் தங்கத்தின் இறக்குமதி தீர்வை மீது விதிக்கப்ப்ட்டிருந்த 100 சதவீத மேலதிக அறவீடு அகற்றப்படும் என அறிவித்தார்.

தங்கத்தின் விலை சடுதியாக வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து தங்கம் மீதான 10 சதவீத இறக்குமதி தீர்வை மீது 100 சதவீத மேலதிக அறவீடு விதிக்கப்பட்டது.

## புலிகளுக்கு உதவினால் தண்டனை



புலிகள் இயக்கமானது தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும் . இதற்கு ஆதரவு தெரிவிப்பவர்களுக்கு நாம் சட்டப்படியாக நடவடிக்கை எடுப்போம் . பயங்கரவாதிகளுக்காக உதவி வழங்க முன்வருபவர்கள் பயங்கரவாதியாகவே கருதப்படுவார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் .உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு புலிகளின் கல்லறைகள் மீண்டும் அமைக்க வேண்டும். என்பது தொடர்பாகவோ அல்லது பிரபாகரன் பற்றியோ பேசுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை . உள்ளூராட்சி மன்ற அரச உறுப்பினர்கள் மக்களுக்கு சேவை செய்யவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் .கல்லறைகள் அமைப்பதானது மக்களுக்கான சேவை இல்லை . அது

19 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுப்போம்



### மீண்டும் வலியுறுத்துகிறது பிரித்தானியா

இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய உள்ளக விசாரணைகளை நடத்தவில்லையெனில் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரித்தானிய மீண்டும் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் பொதுநலவாய அலுவலகத்தின் சிரேஸ்ட அமைச்சர் பரோனெஸ் வர்ஸி இந்தக் கருத்தை நேற்று முன்தினம் பிரபுக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுநலவாய கொழும்பு மாநாட்டில் பிரித்தானியாவில் பிரதம மந்திரி பங்கேற்றமை சரியான தீர்மானமே என்று பரோனெஸ் குறிப்பிட்டுள்ளார்.

டேவிட் கமரூன் இலங்கைக்கு சென்றதன் மூலம் அந் நாட்டின் விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரமுடிந்தது. அத்துடன் 1948 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளிநாட்டு தலைவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## வட, கிழக்கில் 90,000 விதவைகள்; இது யுத்தத்தின் அறுவடை

### சாந்தி சச்சிதானந்தம் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் கணவனை இழந்த விதவைகள் சுமார் 90,000 பேர் உள்ளனர் என 'விழுது' ஆற்றல் பேரவை மையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள விதவைகளின் குடும்பங்களுக்கு தலைமைதாங்கும் பெண்களின் மாநாடு2013 மட்டக்களப்பு கிறீன் கார்டன் ஹோட்டலில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்கூறப்பட்ட 4 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட எண்பது விதவைகள் செயலணியின் தலைவிகள் பங்குகொண்ட மாநாட்டில் கலந்து கொண்டு அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாட்டு விதவைகள் அமைப்புடன் விழுது அமைப்பு தொடர்பு வைத்துள்ளதினால் விதவைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், இலவச சட்ட உதவி, வாழ்வாதார மேம்பாடு உள்ளிட்ட பலவேறு பிரச்சினைகளுக்கு உதவுவதாகத் தெரிவித்தார்.

சர்வதேச விதவைகள் தினம் ஜூன் 23ஆம் திகதி என பிரகடனப்படுத்திய நிலையில் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் அரச புள்ளி விபரம் இதுவரையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் ஜெயபாலன் கைது



விசா விதிகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கவிஞரும், நடிகருமான வா.ஐ.ச. ஜெயபாலன் மாங்குளம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன பி.பி.சி தமிழோசையிடம் தெரிவித்தார்.

சுற்றுலா விசாவில் வந்திருந்த ஜெயபாலன், நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ரோஹன தெரிவித்தார்.

அவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை குடிவரவு,குடியகல்வுத் துறை அதிகாரிகள் எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

நோர்வே குடியுரிமை பெற்ற வ.ஐ.ச ஜெயபாலன் தற்போது பெரும் பகுதி காலத்தை தமிழகத்தில் கவழித்து வந்தார்.

06




விரக்தியின் விளிம்பில்

08



கிழிந்தது தசைநார்

12




பகிரங்கமடல்

### ஊற்றுப்புல வர்த்தகர்களிடம்

# சட்டவிரோதமான நிலவாடகை கோருகிறார் கரைச்சி தவிசாளர்

(கிளிநொச்சி)

அரசுக்கு சொந்தமான காணிகளில் நீண்டகாலமாக வர்த்தக நிலையங்கள் அமைத்து வியாபாரம் செய்து வரும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட ஊற்றுப்புலம் சந்தி வர்த்தகர்களிடம் சட்டத்திற்கு புறம்பாக நில வாடகையினை கரைச்சி பிரதேச சபைக்கு செலுத்துமாறு அதன் தவிசாளர் வை.குகராஜா நேற்றைய தினம் வர்த்தகர்களிடம் கோரியதால் அந்த வர்த்தகர்கள் கடும்எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி ஊற்றுப்புலம் சந்திப் பகுதியில் நீண்டகாலமாக வர்த்தக நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்கள் அந்த நிலங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு கரைச்சி பிரதேசசெயலாளரிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் பிரதேச செயலகத்தினால் குத்தகை அடிப்படையில் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு சம்மதித்துள்ள நிலையில் நேற்றையதினம் குறித்த பகுதிக்கு சபையின் செயலாளர் மற்றும் சில அதிகாரிகளுடன் சென்றிருந்த சபையின் தவிசாளர் குகராஜா வர்த்தகர்களை அழைத்து விற்பனைவரி, வியாபார அனுமதி, கட்டடம் அமைப்பதற்கான அனுமதி, நில வாடகை என்பன செலுத்த வேண்டும் எனவும் இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் எனவும் எச்சரித்தார்.

இந்த நிலையில் தங்களின் கருத்துக்களை தெரிவித்த வர்த்தகர்கள் உள்ளூராட்சி சட்ட திட்டங்களுக்கு அமைவாக கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதி, விற்பனை வரி என்பவற்றை செலுவதற்கு தாங்கள் தயார் என்றும் ஆனால் பிரதேசசபைக்கு சொந்தமல்லாத அரச காணிக்கு நில வாடகை பிரதேச சபைக்கு செலுத்த முடியாது எனவும் திட்டவட்டமாக தெவித்தனர். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாத கரைச்சிப்பிரதேச் சபையின் தவிசாளர் குகராஜா அவர்கள் குறித்த காணி பிரதேச சபைக்கு சொந்தமானது என பொய்யுரைத்த நிலையில் காணிக்கான ஆவணத்தினை காட்டுமாறு வர்த்தகர்கள் கோரிய போது அதனை இந்த இடத்தில் காட்ட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த காணி தொடர்பாக கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரனுடன் தொடர்புகொண்டு கேட்ட போது,

குறித்த ஊற்றுப்புலம் சந்திக் காணியானது பிரதேச சபைக்கு சொந்தமானது என்பதற்கு எவ்வித ஆவணங்களும் இல்லை அந்தக் காணி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதற்கும் எவ்வித ஆதாரங்களும் இல்லை ஒன்று பிரதேச சபை குறித்த காணியினை கொள்வனவு செய்திருக்கவேண்டும் அல்லது அரசு பிரதேச சபைக்கு காணியினை வழங்கியிருக்க வேண்டும் இதில் எதுவுமே இடம்பெறாமல் நில வாடகையினை கோருவதற்கு பிரதேச சபைக்கு உரிமையில்லை எனத்தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த காணி அமைந்துள்ள கரைச்சி பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்ட போது, ஊற்றுப்புலச்சந்தி காணியானது அரச காணி அந்தக் காணிகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கவேண்டியது எங்களின் பொறுப்பாகும் நீண்டகாலமாக மேற்படி இடத்தில் வர்த்தகர்கள் தங்களின் சொந்தப் பணத்தில் வியாபார நிலையங்களை அமைத்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். இந்த வர்த்தகர்கள் எங்களிடம் காணி அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளனர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாகவும் அரச காணி சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் நாமே இறுதித் தீர்மானம் எடுப்போம் என குறிப்பிட்டார்.

எனவே நிலைமைகள் இவ்வாறிருக்க ஒப்பீட்டு ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள அந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துடன் சம்மந்தப்பட்ட விடயத்தில் பிரதேச சபை தவிசாளர் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக நடந்துகொள்வது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வட்டக்கச்சி ஸ்கந்தபுரம் சந்தைகளை நிர்வகிக்கும் திறனற்ற நிலையில் ஆடு மாடுகள் படுத்துறங்கும் இடமாக வைத்துக்கொண்டு தேவையற்ற விடயங்களில் தவிசாளர் கவனம் செலுத்தி வருவது அனைவரிடமும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊற்றுப்புலம் வர்த்தகர்கள் தொடர்பில் கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் நடவடிக்கைகள் மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக உள்ளது எனவும் பலர் சுட்டிகாட்டியுள்ளனர். (29)

## பரீட்சை நாளை

(இணுவில்)

எஸ்.எல்.இ.எஸ். (S.L.E.A.S) நாளைய தினம் கொழும்பில் இடம்பெறவுள்ளது கிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய வகையில் பரீட்சை வினாத்தாள் அமைந்துள்ளது.

இப்பரீட்சைக்கு வடபகுதியிலிருந்து தோற்றுபவர்கள் நேற்றைய தினமமே கொழும்பிற்கு சென்றுள்ளனர். (17)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1010

திகதி 21.11.2013

வெற்றி எண்கள்: 07 51 55 64 ஆங்கில எழுத்து U

ஜக்பொட் பரிசு ரூ. 1,47,98,980/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,47,98,980/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 268 | 1,000/= | ரூ. 2,68,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 434 | 1,000/= | ரூ. 4,34,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11741 | 60/= | ரூ. 7,04,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5872 | 40/= | ரூ. 2,34,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154661 | 20/= | ரூ. 30,93,220/= |
| ஆங்கில எழுத்து | 22829 | 20/= | ரூ. 4,56,580/= |
| | | மொத்தம் ரூ. | 67,41,140/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
| --- | --- |
| கேகாலை | 705254301-8-08 |
| நுவரெலியா | 705240102-9-29 |
| குருநாகல் | 705242993-9-29 |
| கொழும்பு | 705254511-6-06 |
| பொலன்னறுவை | 705244638-2-32 |
| கண்டி | 705240498-8-48 |
| கொழும்பு | 705250762-9-19 |
| மாத்தளை | 705246363-1-41 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,41,140/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 15,100,660/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.11.25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை. யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335416/7

(C/3185)


## குழந்தைகள் உலக முன்பள்ளி கலைவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள குழந்தைகள் உலக முன்பள்ளியின் கலை விழாவும், நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

சமாதான நீதவான் கே. சதீஸ்குமார் தலைமையில் நாளை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் கே. தேவராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், யாழ். பிரதேச செயலக முன்பள்ளிகளின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.அமலன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் என். சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தரும், குழந்தைகள் உலக முன்பள்ளியின் முன்னை நாள் இயக்குநருமான பி.பத்மகுமார் மற்றும் குழந்தைகள் உலக முன்பள்ளி முன்னைநாள் அபிவிருத்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பி.நிதர்சனா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (06)

## ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இந்து சமயம், இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்ளிற்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு இன்று காலை 8.30 மணி முதல் 5 மணி வரை மானிப்பாயில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்வில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் 'இந்துக் கட்டடக்கலை மரவு' என்ற விடயம் பற்றியும், சைவப்புலவர் கந்த சக்தியாசன் 'சைவ சித்தாந்தத்தில் பாசக்கோட்பாடு' பற்றியும், சைவப்புலவர் என்.பி.ஸ்ரீந்திரன், எஸ்.பி. ஏ. வேலைத்திட்டம் பற்றியும் கருத்துரையும், செயலமர்வும் செய்யவுள்ளனனர்.

மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆசிரிய கைநூலினையும், பாடசாலை மட்டங்களில் மீட்டுக்கருவிகளையும் கொண்டுவரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (06)

## ஆலய அனனதான மடததில கரபபவதிகளுககு கிளினிக

நவாலி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகளுக்கான மாதாந்தக் கிளினிக் தற்போது நவாலி முருகமூர்த்தி ஆலய அன்னதான மண்டபத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இக்கிளினிக் சேவை நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இயங்கிவந்த நிலையில், அண்மையில் வை.எம்.சி.ஏ. நிர்வாகம் இக்கிளினிக்கை வேறு இடத்திற்கு மாற்றுமாறு அறிவித்ததைத் தொடர்ந்து சுகாதார உத்தியோகத்தர்கள் இங்கிருந்து வெளியேறி இடமில்லாது அலைந்து திரிந்த நிலையில் நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் தமது மேல்மாடி மண்டபத்தினையும், முருகமூர்த்தி ஆலய அன்ன தான மண்டபத்தின் ஒருபகுதியினையும் இலவசமாக வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து இக்கிளினிக் சேவை புதிய இடத்தில் இடம் பெற்றுவருகின்றது. சனசமூக நிலையத்தினரின் இத்தகைய முன்மாதிரியான செயற்பாட்டை சகலரும் பாராட்டியுள்ளனர். (104)

## செயற்குழுக் கூட்டம்

(வடமராட்சி)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சங்கத்தலைவர் செ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் க.வேலாயுதம் தெரிவித்துள்ளார். (109)

## மாதாந்தக் கூட்டம்

பருத்தித்துறை பிராந்திய சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு பிராந்திய சபைத்தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலைப்புலோலி சதாவதானி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை பிராந்தியத்திலுள்ள அனைத்து சங்கத்தினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)




# நவீன கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும்

## தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்

இன்றைய காலத்தில் பல பாடசாலைகளில் நவீன கற்பித்தல் சாதனங்கள் இருக்கின்ற போதிலும் அவை பயன்படுத்தப்படாமல் இருப்பது கவலையளிக்கும் விடயமாகவுள்ளது என திவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

காரைநகர் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர் தியாகராசா மத்தியமகா வித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாணவர் கௌரவிப்பு நிகழ்வை அந்தந்த பாடசாலைகளில் நடத்தும்படி பணித்திருந்தும் நாம் இந்தக் கோட்டத்தில் உள்ள மாணவர்களை ஒரே இடத்தில் அழைத்து இச்சான்றிதழ் வழங்கும் போது ஒவ்வொரு மாணவனும் சகமாணவர்களின் விபரங்களை அறிந்து கொள்ளக கூடியதாக அமைகிறது.

சகல மாணவர்களுக்கும் நவீன மின்னியல் சாதனங்கள் பாடசாலை வகுப்பறை கல்விக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கரும் பலகையில் வெண்கட்டி பயன்படுத்தி கற்பிக்கும் முறை யிலிருந்து ஆசிரியர்கள் கணிசமான அளவு மாறியதாகத் தெரியவில்லை.



வகுப்பறைகளுக்காக வழங்கப்பட்ட திட்டம் மல்ரிமீடியா இணைய கணனி உபக ரணங்கள் சில பாடசாலைகளில் இன்றும் அதிபர் அறைகளை அலங்கரிக்கின்ற காட்சிப் பொருட்களாகவே இவை இருந்து வருகின்றன.

நமது கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென்றால் முதற்கட்டமாக இந்த நவீன கற்பித்தல் உபகரணங்கள் எல்லாம் முழுமையாக வகுப்பறைகளை நோக்கி நகர்த்தப்படுதல் அவசியமானது.

இன்று இலங்கையில் கல்வி முறையானது நிர்ணயப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அந்த நிர்ணய வரையறைக்குள் நின்று கொண்டு எமது கல்விக் கொள்கைகளுக்கு புத்துணர்வு கொடுத்து கல்வி முறையை மேமபடுத்த வேண்டும். நல்ல தரமான கல்வியினால்தான் ஒரு நல்ல மனிதனை உருவாக்க முடியும் என அவர் தெரிவித்தார். (50)

# கட்டுரைப் போட்டியில் மாணவி சாதனை



பொது நலவாய மாநாட்டை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்.மாணவி இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இக்கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் நடாத்தப்பட்ட போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தரம் 12 வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் விதுஷா வாசுதேவன் என்ற மாணவியே இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தவராவார்.

பரிசளிப்பு விழா கடந்த 11 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாணவிக்கான பரிசிலை வழங்கினார்.

மேலும் இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை சமூகத்தினருக்கு மாணவி தனது நன்றிகளைத தெரிவித்துள்ளார். (93)

# பன்றித்தலைச்சி அம்மன் வருடாந்த மகோற்சவம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திருமஞ்சத் திருவிழாவும், 15 ஆம் திகதி கைலாச வாகனமும், 16 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், இரவு சப்பறத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. மறுநாள் 17 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு இரதோற்சவம், 18 ஆம் திகதி புதன் கிழமை மு.ப 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

கொடியேற்றம், தேர்,தீர்த்தம் ஆகிய தினங்களில் அபிஷேகம் காலை 7 மணிக்கும் ஏனைய தினங்களில் காலை 9 மணிக்கும் மாலைத் திருவிழா 5 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும் (இ)



மன்னார் மாவட்ட அடம்பன் பிரதேச சபையின் பொதுநூலகத்தினால் நடாத்தப்பட்ட வாசிப்பு மாத நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவனுக்கு பரிசில் வழங்கப்படுவதைக் காணலாம். (140)

# காணாமற்போனவர்களின் கண்ணீர் விற்பனைக்கு!




காணாமற்போன உறவுகளின் கண்ணீரைப் பற்றியும் அந்தக் கண்ணீரை அரசியல் முதலீடாக்கும் கஜேந்திரன் VS அனந்தி குறூப்பைப் பற்றியும் சில வார்த்தைகள்.

போர் முடிந்தாலும் கண்ணீரும் கம்பலையும் முடியவில்லை.

அதிலும் காணாமற்போன உறவுகளின் கண்ணீருக்கும் கம்பலைக்கும் எல்லையில்லை.

தங்களின் உறவுகளைத் தேடித் தினமும் கணமும் தவிப்பது கொடுமை.

தொலைந்த உறவுகள் மீண்டு வருமா? என்று தெரியாத நிலை கொடுமையிலும் கொடுமை.

காணாமற்போகடிக்கப்பட்டவர்கள் திரும்பக் கிடைப்பார்களா என்ற எதிர்பார்ப்பும் ஏக்கமும் சாதாரணமானதல்ல.

காணாமற்போனவர்கள் உயிரோடு உள்ளனரா இல்லையா என்று உறுதி செய்ய முடியாத நிலை எல்லாவற்றையும் விடக் கொடுமையானது.

ஒரு ஆட்டுக்குட்டி தொலைந்து போனதற்கே இரண்டு வாரங்கள் அழுதவள் நான். நான்கு நாட்கள் பள்ளிக்கூடத்திற்கே போகாமல் அந்தக் குட்டியை அப்பாவோடும் அம்மாவோடும் தேடியிருக்கிறேன்.

ஒரு மனிதன் காணாமற் போகும் நிலை என்பது எத்தனை பாரதூரமானது.

அப்படியிருக்கும்போது ஆயிரக்கணக்கான மனிதர்கள் காணாமற்போகும் சூழல் எப்படியானது? கொடிதிலும் கொடியதல்லவா அது.

இந்தக்கொடுமையைத்தான் நாங்கள் இன்று சுமந்து கொண்டிருக்கிறோம்.

பிள்ளைகளைத் தொலைத்த தாய்மாரின் கண்ணீர் இந்த உலகத்தையே மூழ்கடித்து விடப்போகிறது எனப் பயந்து கொண்டிருக்கிறேன்.

யாரை எப்போது கண்டாலும் அழுது புலம்பும் அன்னையரைத் தினமும் காண்கிறேன். ஒரிடத்தில் அல்ல ஈரிடத்தில் அல்ல. எங்கும் எங்கெங்கும்.

பிள்ளைகளை இழந்த தாயரை மட்டுமல்ல, துணைவரை இழந்த பெண்களை, தந்தையை இழந்த பிள்ளைகளை, சோதரரை இழந்த சோதரரையும் சோதரிகளையும் என ஆயிரக்கணக்கான உறவுகளைச் சந்திக்கிறோம்.

அவர்கள் சொல்கின்ற கதைகளும் கேட்கின்ற கேள்விகளும் எங்கள் இதயத்தைக் கரைந்தொழுகச் செய்கின்றன.

ஆனால், இந்தப் பிரச்சினைக்கான முடிவென்ன? தீர்வென்ன?

அவர்களை அரசியலுக்காகப் பயன்படுத்துவதற்காக 500ஒ, 1000மோ கொடுத்து ஊர்வலம் நடத்துவதும் கையில் மட்டையைக் கொடுத்து கண்ணீர் சிந்த வைப்பதுதானா?

இதைத்தான் மனோகணேசனும் கஜேந்திரகுமாரும் சிறிதரனும் அரசியலுக்குப் புது முகமான அனந்தியும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தீர்வையும் பெறுவதற்காக இவர்கள் போராடத் தயாரில்லை.

காணாமற்போனவர்களைப் பற்றி, அவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் கண்ணீர் மக்களைப் பற்றி இந்த உலகத்துக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால், இந்த உலகம் இன்னும் வேடிக்கை பார்க்கிறது. ஒரு பதிலையும் சொல்லாமல், கள்ளத்தனமாக நடிக்கிறது.

நிச்சயமாக இந்த அவலத்திற்கு ஒரு தீர்வு வேண்டும். ஒரு முடிவு வேண்டும். அதைத் தருவது அரசின் பொறுப்பு. இந்த உலகத்தின் பொறுப்பு. ஒவ்வொரு கட்சியினதும் பொறுப்பு. ஒவ்வொரு தலைவருக்கும் உரிய கடமை.

ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி இந்தப் பொறுப்புகளில் இருந்து தப்பிச்செல்ல முடியாது.

ஒன்றின் விளைவாகவே மற்றது நடந்தது. எனவே விளைவுகள் அத்தனைக்கும் அத்தனை தரப்புகளும் பொறுப்பே.

ஆனால், காணாமற்போனவர்களை வைத்து, அவர்களின் உறவுகளை அழைத்து, அவர்களுடைய கண்ணீரையும் கம்பலையையும் வைத்து மற்றவர்கள் அரசியல் செய்வதே தொடர்கிறது.

ஊடகங்கள் இதையெல்லாம் கஞ்சாப் பொருளாக்கிப் பிழைப்பு நடத்துகின்றன.

பரிதவிக்கும் உறவுகளின் கண்ணீரைப் போக்கி அவர்களை ஆற்றுப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் தெருத்தெருவாக அழைக்கப்பட்டு அழ வைக்கப்படுகிறார்கள்.

அவர்களுக்கான நீதி கிடைக்கும் வரை போராட வேண்டும். நடந்த அநீதியை அம்பலப்படுத்த வேண்டும் என்பதெல்லாம் உண்மையே.

ஆனால், அவர்களுடைய உளவியல் பாதுகாக்கப்படவும் அவர்களுடைய வாழ்க்கைப் பாதுகாப்பும் அமைதியும் பெறவும் வேண்டுமே.

மீள மீளக் காயங்களைக் கிளறி விடுவதால் அவர்கள் சிதைந்தே போவர்.

நிவாரணமும் கிட்டாமல் ஆறுதலும் கிடைக்காமல் அழுது புலம்புவதில் பயனேது?

அனந்திக்காக அழவும் கஜேந்திரனுக்காக காணாமற்போன உறவின் படத்தைத் தாங்கவும் உலகத்துக்கு முன்னே ஏமாளிகள் போலக் காலம் நீளத்துக்கும் கண்ணீர் விடவும் முடியாது.

ஒரு கொடுமைக்கு பதிலாக இன்னொரு அவலத்தை அங்கீகரிப்பது அழகல்ல.

அரசியலுக்காகவே ஒரு கொடுமையைச் சந்தித்த மக்கள் இன்னொரு அரசியலுக்காக இன்னொரு ஏமாற்றுதலை ஏற்க முடியாது.

ஒன்றில் எந்த வழியிலாவது ஆளை மீட்டுத்தாருங்கள். அல்லது கண்ணீரையும் காயத்தையும் பெருக்காமல் விட்டுச்செல்லுங்கள்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இணக்கத்திற்கான கரங்கள் நீள்க!

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்குமான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவராக வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை நியமித்து, நியமனக் கடிதத்தையும் அனுப்பிவைத்துள்ளார் ஜனாதிபதி.

நாட்டின் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்ட மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, இந்த நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் ஒன்றுபோல அபிவிருத்தியில் முன்னெடுத்துச் செல்ல வடக்கு முதலமைச்சரின் மேலான பங்களிப்பையும் வழங்குமாறு ஜனாதிபதி தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

பகைமை வளர்த்து, அழிவுகளால் மக்களை நொந்துகெட வைத்து, மேலும் மேலும் முறுக்கிக்கொண்டு முகந்திருப்பி அரசியல் செய்து நமது மக்களுக்கு நல்லது எதுவும் ஆகப்போவதில்லை.

இணக்கக் கரங்கள் நீளும்போது அவற்றை நாமும் பற்றி, நலிந்துகிடக்கும் நமது மக்களின் வாழ்வை மேம்படுத்துவதுதான் நல்ல தலைமைக்கு அழகாக இருக்க முடியும். அதை விடுத்து, ஏதாவதொரு குற்றச்சாட்டைக் கண்டுபிடித்துக் கொண்டு, மக்களை வெற்று ரோசத்தால் திருப்திப்படுத்தி, பகிஷ்கரிப்பு அரசியலை இனியும் செய்துகொண்டிருப்பது, மக்களது வாழ்வைத் தொடர்ந்து ஏமாற்றுவதாகத்தான் அர்த்தப்படும்.

வடக்கு மக்களின் வாழ்வை உயர்த்த அரசாங்கம் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று வெறுமனே வாயால் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? நமது பிரதேச அபிவிருத்திக்காக அரசாங்கத் தரப்புடன் இணைந்து செயலாற்ற நாமும் தயாராக வேண்டுமல்லவா!

நமது 'சரி'கள் பற்றி மட்டுமே எப்போதும் பேசிக்கொண்டிருந்தால், எதிர்த்தரப்பே மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு இன்னுமின்னும் இறங்கி வரவேண்டும் என்று குற்றத்தைச் சாட்டிக்கொண்டிருந்தால், அது இந்த நாட்டில் இணக்க நடைமுறையிலான அரசியல் சூழல் உருவாக நாமும் வழிமறித்துக் கொண்டிருக்கிறோம் என்றுதானே பொருளாகும்.

பெருங்காய டப்பா நினைவுகளில், சிறுபிள்ளைத்தனமான முரண்டும் பிடிவாத மறுப்புகளுமே நமக்கான அரசியல்ஞானமாகத் தேங்கிவிட்டிருக்கிறது! தீர்வும் அமைதியும் அபிவிருத்திச் சூழலும் காண்பதற்குப் பேச வேண்டியது என்ன என்பதைப் புறக்கணிப்பவர்களாகி விடுகிறோம்.

எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் தற்திருப்தி அடைந்து கொள்கிறோம். எதிர்த்தரப்பை ஆவேசப்படுத்துவதில் – பிளவு அரசியலில் குறுகிய அரசியல் ஆதாயங்களைக் கண்டுகொள்கிறோம். குரலற்ற மக்கள் மீது துன்பங்களைச் சுமத்தியவாறே 'ரோச அரசியலை' தொடர்கிறோம்.

நம்மிடம் சரிகள் இருப்பது போலவே எதிர்த்தரப்பும் தன் சரிகளை வைத்துக் கொண்டுதானிருக்கும் என்ற எளிய உண்மையை மறந்துவிடுகிறோம். பிரச்சினை என்னவென்றால், இந்த சரிகளைப் பேசிக் கொண்டிருப்பதால் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாகி விடுவதில்லை. தங்கள் தங்கள் தவறுகள், குற்றங்கள் குறித்த உணர்வும் பரஸ்பர மன்னிப்புப் பரிமாறலுமே நம்மை நல்லிணக்கம் நோக்கிச் செலுத்துவதாக இருக்கும்.

வாழ்வைப் பெறும் வழி பற்றியும் நம்பிக்கை கொடுக்காமல், வழிகளைத் தேடும் பேச்சுக்கும் நம்பிக்கை காட்டாமல், வெறுப்பு விரக்திக் குற்றச்சாட்டுப் பகை அரசியலிலேயே மக்களை மூழ்கடித்து வருவதை இனி நிறுத்தியாக வேண்டும். இப்படிச் சிந்திப்பதே 'தமிழ்வீரத்திற்கு' இழுக்கு என்ற மதிப்பீடுகளிலிருந்து நாம் மண்டாக வேண்டும்.

நம்மையே வதைத்துக் கொள்ளும் ரோசமும் வீம்பும் பழிவாங்கும் திருப்தியும் ஒருபோதும் மக்களது சுதந்திர வாழ்வாகாது என்று புரிந்துகொள்ள வேண்டும். - ஆசிரியர்.

# மக்கள் நலன் கருதியதாக "பட்ஜட்" தயாரிக்கப்படவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரண பொதுமக்கள் பற்றிய எந்தவொரு விடயமும் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லைமாறாக பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலேயே அதிகளவில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ள போதிலும், இந்தப் பரிந்துரைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கரவண்டி மானிகளுக்கு புதிய தரநிர்ணயம்

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள மானிகளுக்கு நிறுவப்படும் புதிய தரநிர்ணயத்தை நிறுவ உள்ளதாக அளவீட்டு அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முச்சக்கர வண்டிகளில் உள்ள மானிகள் நேர்த்தியான முறையில் இயங்குகின்றனவா என்பதனை கண்டறிவதற்கான விசேட உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கே.பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான முச்சக்கர வண்டிகளில் மானி பொருத்தப்பட்டுள்ள போதிலும், அவற்றுள் அநேக மானவை உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை இத்தகைய மானிகளை விற்பனை செய்கின்ற நிறுவனங்கள், அவற்றின் விற்பனைக்கு முன்னர் மானிகளின் தரம் குறித்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், மானி பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கான புதிய தரநிர்ணயத்தை விரைவில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியாவுக்கு சென்ற 79பேர் திருப்பியனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் சென்றவர்களில் 79பேர் பேர் இலங்கைக்குதிருப்பி அனுபப்பட்டுள்ளனர். கடந்த 10ஆம் திகதி அவுஸ்ரேலியா சென்றடைந்த குழுவொன்றே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் கூறியுள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் புதிய கொள்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 'நீங்கள் படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா வந்தால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படு வீர்கள்' எனும் கடுமையான செய்தியையும் அந்நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் குடிவரவுக் கொள்கை முன்னொருபோதும் இல்லாதவாறு கடுமையாக்கப்பட்டுள்ளது. இதன்படி,கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து படகு மூலம் அவுஸ்ரேலியா சென்ற 1,100 இறதும் மேற்பட்ட இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

'கடத்தல்காரர்களுக்கு பணம் செலுத்துவோர் தமது உயிரை ஆபத்துக்கு உள்ளாக்குவதுடன் பணத்தையும் வீணடிக்கின்றனர். இங்கு அவர்களுக்கு விஸா கிடைக்காது.

இவர்கள் எதற்காக பணம் கொடுத்தார்களோ அது அவர்களுக்கு கிடைக்காது.

அதனால் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவர். அவுஸ்ரேலிய அரசாங்கம் படகு மூலம் வருவோரை திருப்பி அனுப்புவதை தொடர்ந்து முன்னெடுக்கும்' என்று அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அரசியலில் சந்திரிகா?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் அரசியல் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய நல்லொழுக்கம் நிறைந்த அரசியல் கலாசாரம் மற்றும் கொள்கைகளை மீண்டும் சமூகமயப்படுத்தும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் விசேட அரசியல் செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளார்.

டிசம்பர் முதல் வாரத்தில் அவுஸ்ரேலியாவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் சிறப்புரையாளராக கலந்து கொள்ளும் சந்திரிகா, இதன் பின்னர் வெளிநாட்டில் இருந்து வரும் தனது பிள்ளைகளுடன் விடுமுறையைக் கழித்த பிறகு, ஜனவரி மாதம் முதல் அரசியலுக்கு வருவதாக கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாக பாம்புடனான நட்பால் குடும்ப வாழ்க்கை சிக்கலில்

மொனராகலை மாவட்டம் வெல்லவ பிரதேசத்தில் இளம் பெண் ஒருவர் பெரிய நாக பாம்பு ஒன்றிடம் வசப்பட்டுள்ளதால் அவரது குடும்ப வாழ்க்கை நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

வெல்லவ ஹேரத்கம என்ற பிரதேசத்தில் திருமணமான 30 வயதான பெண்ணுடன் பெரிய நாக பாம்பு நட்புடன் பழகி வருவதுடன் அந்தப்பெண்ணை தினமும் பின் தொடர்ந்து வருகிறது.

இதனால் பெண்ணின் வீட்டில் தகராறு ஏற்பட்டு, வெல்லவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.


பெண்ணை பின் தொடர்ந்தும் வரும் இந்தப்பாம்பு இரவில் அந்த பெண்ணின் அறைக்குள் புகுந்து கொள்வதோடு வெளியில் செல்வதில்லை.

உயிரிழந்த உறவினர் ஒருவர் நாக பாம்பாக பிறந்துள்ளதாக நம்பும் இந்தப்பெண் தான் உறங்கும் கட்டிலுக்கு அருகில் நாகம் படுப்பதற்காக பெட்டியை ஒன்றையும் வைத்துள்ளார்.

வீட்டில் நாக பாம்பு இருப்பதால் பெண்ணின் கணவரும் பிள்ளைகளும் இரவில் வீட்டுக்கு வெளியில் நித்திரை செய்கின்றனர்.

பெண்ணுக்கு எவரும் தீங்கிழைக்க நாக பாம்பு இடமளிப்பதில்லை எனவும் நாகத்தை அடிக்கவோ அதனை துன்புறுத்தவோ பெண் இடமளிப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் காரணமாக குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து நேற்றுமுன்தினம் வெல்லவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

# 56

வே.அர்ச்சுணன்

**ஆயுத பலம் என்பது யுத்த களமுனையில் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக கருதப்பட்டது. இந்த நிலையில்தான் மற்றொரு டீலைப் பிடித்திருக்கிறேன் ஐவரிகோஸ்டில் புலிகளிற்காக கப்பல் ஒன்றை வாங்கலாம் என்ற செய்தியுடன் இதற்கு மேலும் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது என்ற தகவல் பரிமாறப்பட்டதுடன் இந்தக் கப்பல் நிதிக்காக ஐரோப்பியநாடு (சுவிஸ்) ஒன்றில் தமிழ் மக்களிடம் பிரத்தியேக வசூல் செய்யப்பட்டது. உங்கள் பேரில் வங்கியில் பணம் எடுக்கிறோம் அதன் மாத வட்டியை நாமே கட்டி விடுகிறோம் என்ற தகவல் பரிமாறப்பட்டிருந்தது.**

விடுதலைப் புலிகளிற்கு ஆயுதம் என்பது அவசர தேவையாகவும், மிகவும் முக்கியமான தொன்றாகவும் இருந்த காலகட்டம் என்று குறிப்பிடலாம். அதாவது முன்னைய நாட்களில் விடுதலைப் புலிகள் தங்களது படை நடவடிக்கைகளுக்கு தேவையான ஆயுதங்களை யுத்த முனைகளில் அரச படைகளுடன் போரிட்டு அந்தப் போரின் மூலம் கைப்பற்றப்படும் ஆயுதங்களை வைத்து மீண்டும் தாக்குதலை நடத்தி வந்த வரலாறுகள் பல இருக்கின்றன. அதாவது பூநகரி படைத்தள அழிப்பின்போது விடுதலைப் புலிகள் அரச படைகளிடமிருந்து பெருமளவான ஆயுதங்களை அக்காலப்பகுதியில் கைப்பற்றி இருந்தனர்.

பூநகரி, நாகதேவன் துறை படை முகாம் அழிப்பு என்பது வரலாற்று ரீதியில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு யுத்த முனையாக விடுதலைப் புலிகளிற்கு இருந்தது. இவ்வாறு சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் வன்னியில் அகலக் கால் பதிக்கும் நோக்குடன் அரச படைகள் மேற்கொண்ட படை நடவடிக்கைகள் ஒவ்வொன்றின் போதும் விடுதலைப் புலிகள் தங்களது முழுப் படைபலத்தையும் பயன்படுத்தி அரச படைகள் மீது தாக்குதல்களை நடத்தி அரச படையினரிடமிருந்து பெருமளவான ஆயுதங்களை கைப்பற்றி அந்த ஆயுதங்கள் மூலம் மீண்டும் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுப் படைத்தளத்தை புலிகள் தாக்கி அழித்து வெற்றி கொண்ட காலப்பகுதியிலும், குடாரப்பு தரையிறக்கத்தின் மூலம் மேற்கொண்ட பெரியளவிலான படை நடைவடிக்கையின்போதும் அரச படையிடமிருந்து பெருமளவான நவீனரக ஆயுதங்களை கைப்பற்றியதுடன் குறுந்தூர, நீண்டதூர பீரங்கிகளைக் கைப்பற்றி தமது படை வலு ஆற்றலை புலிகள் பெருக்கி இருந்தனர். இக்காலப் பகுதிகளில், விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளை பார்த்து பல தமிழ் இளைஞர்களும் இயக்கத்தல் இணைந்து வந்தனர்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்று, அரச தரப்புடனான பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் புலிகள் பெரியளவிலான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. இராணுவ ரீதியிலான பெரியளவிலான யுத்த முன்னெடுப்புகளுக்கு அரச படையினர் இடம் கொடுக்கவில்லை அல்லது அதற்குரிய சூழலை ஏற்படுத்தவில்லை என்று குறிப்பிடலாம். ஏனெனில் இராணுவ ரீதியிலான மரபுவழித் தாக்குதல்களுக்குரிய நீண்ட வேலைத் திட்டத்திற்கு இடம் கொடுக்காமல் விடுதலைப் புலிகள் மீதுதொடர் தாக்குதல்களையும், தொடர் நெருக்கடிகளையும் ஏற்படுத்துகின்ற ஒரு போர் யுக்தியை மகிந்த அரசு ஏற்படுத்தி இருந்தது என்பதுடன் விடுதலைப் புலிகளாலும் பெரியளவிலான இராணுவ வெற்றிகளையோ அல்லது இராணுவ சாதனைகளையோ முன்னரைப் போன்று ஈட்டமுடியாமல் போய்விட்டது.

இதைவிட கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த ஆயுத இறக்குமதி டீல் நிறுத்தப்பட்டு, இந்த டீலை வேறு தரப்பினர் ஊடாக மேற்கொள்ள முயற்சித்த பின்னர் அது வெற்றியளிக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். இந்த விவகாரமே ஐவரிகோஸ்ட் வரை சென்று, பெருமளவான பணத்தினையும் வாரி இறைத்து அந்த ஆயுத இறக்குமதி டீல் பின்னர் படுதோல்வியில் முடிந்ததும் பலரும் அறிந்த உண்மையாகும்.

ஆயுத டீலும், ஆயுத விநியோகமும் சீராக இருந்திருக்குமானால் யுத்தம் இன்னும் பெரிதாக இருந்திருக்கக் கூடும். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஆயுதக் கப்பல்கள் இலங்கை நோக்கி வர முற்பட்ட போது அந்தக் கப்பல்களை அமெரிக்கா,இலங்கை அரசிற்கு காட்டிக் கொடுத்ததுடன் அந்தக் கப்பல்களையும் அழிப்பதற்குரிய உத்திகளையும், வழிமுறைகளையும் ஆசிய பசுபிக் அமெரிக்க கட்டளை பீடம் கனகச்சிதமாக மேற்கொண்டு வந்தது.

இந்த நிலையில் ஐவரிகோஸ்ட் ஆயுத டீலும் அதன் நகர்வுகள் தொடர்பிலும் மேலோட்டமாக பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.அதாவது 2002ஆம் ஆண்டு அமைதிப் பேச்சுக்களின் பின் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் பெருமளவு பண வசூலில் விடுதலைப் புலிகள் அமைப்பு இறங்கியிருந்த காரணத்தால் 6மில்லியன் டொலர் பணவிடயம் புலிகளிற்கு ஒரு பெரிய விடயமாக இருக்கவில்லை. 2007இன் நடுப்பகுதியில் பொட்டம்மானின் பிரான்ஸ் பிரதிநிதி ஆயுத டீலில் பிசகிவிட்டது என்பதை வன்னிக்கு அறிவித்தார்.

ஆனால் இந்த அறிவித்தலுடன் மட்டும் நிக்காத இந்தப் பிரதிநிதி, இயக்கத்தின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானிற்கு இன்னொரு விடயத்தையும் தெரியப்படுத்தினார். அந்த விடயம் என்னவென்றால் இப்பொழுது ஆயுதக் கொள்வனவிற்காக மற்றொரு டீலை பிடித்திருக்கிறேன். இந்த டீல் இசகு பிசகு இல்லாத தரமான டீலாகும், எந்தப் பிசகும் ஏற்படாது என்று குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் இன்னொன்றையும் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும் அதாவது ஏற்கனவே 6மில்லியன் டொலரை ஆயுத முகவரிடம் கொடுத்து ஏமாந்ததாக வன்னிக்கு குறித்த பிரதிநிதி தெரிவித்த போதிலும் உண்மையில் 4மில்லியன் டொலர் மட்டுமே ஆயுத டீலுக்காக பொட்டம்மானின் இந்தப் பிரதிநிதி செலவிட்டிருந்தார். மிகுதி 2மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு என்ன நடந்தது என்பது அவருக்கு மட்டுமே தெரியும். அதாவது தனது சொந்தக் கணக்கில் இந்த2மில்லியன் அமெரிக்க டொலரை இவர் வைப்புச் செய்துவிட்டார் என்ற விடயம் இறுதி நாட்களிலேயே பொட்டம்மானிற்கும் பிரபாகரனிற்கும் தெரியவந்தது.

இருந்த போதிலும் எல்லாம் முடிந்து இறுதிக் கட்டத்தில் நின்ற பொட்டம்மானும், பிரபாகரனும் குறித்த ஆயுத டீல் முகவர் தங்களை ஏமாற்றியது, ஆயுத இறக்குமதிக்கென அனுப்பிய பணத்தில் மோசடி செய்தது போன்ற விடயங்களுக்காக நடவடிக்கை எடுக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கவில்லை என்பது வெளிப்படையான விடயமாகும். அதாவது புதிய நம்பிக்கை ஊட்டலுடனும், நிச்சயமாக இந்த இலக்கை அடைய முடியுமென்ற தெம்பூட்டலுடனும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு இந்த பொட்டம்மானின் பிரதிநிதி சொன்ன தகவல் ஓரளவிற்கு திருப்தி அளிப்பதாக இருந்தது. வேறு வழிகளை யோசிக்க முடியாத காலகட்டம்.

அதாவது ஆயுத டீலும் அவசரமான ஆயுத இறக்குமதியும் புலிகளிற்கு மிகவும் அவசியமானதும், முக்கியமானதுமாக இக்காலப்பகுதயில் இருந்தது. அரச படைகள் நவீன ரக ஆயுதங்களையும், பல்வேறு புதியதொழில் நுட்பத்துடன் கூடிய ஆயுத இராணுவத் தளபாட உபகரணங்களையும் கொள்வனவு செய்து வந்தனர். இந்த நிலையில் ஆயுதத் தேவை மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக கருதப்பட்ட காலம் ஆகும். ஆயுத பலம் என்பது யுத்த களமுனையில் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக கருதப்பட்டது.

இந்த நிலையில்தான் மற்றொருடீலைப் பிடித்திருக்கிறேன் ஐவரிகோஸ்டில் புலிகளிற்காக கப்பல் ஒன்றை வாங்கலாம் என்ற செய்தியுடன் இதற்கு மேலும் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது என்ற தகவல் பரிமாறப்பட்டதுடன் இந்தக் கப்பல் நிதிக்காக ஐரோப்பியநாடு (சுவிஸ்) ஒன்றில் தமிழ் மக்களிடம் பிரத்தியேக வசூல் செய்யப்பட்டது. உங்கள் பேரில் வங்கியில் பணம் எடுக்கிறோம் அதன் மாத வட்டியை நாமே கட்டி விடுகிறோம். என்ற தகவல் பரிமாறப்பட்டிருந்தது.

அடுத்து என்ன நடந்தது? இந்த முயற்சி வெற்றி அளித்ததா? இந்த விடயங்கைளை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா என்பதை தொடர்ந்து பார்ப்போம். (தொடரும்)



# வெளிநாட்டு அழுத்தங்களுக்காக வெளியுறவுக் கொள்கை மாறாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு அழுத்தங்களுக்காக வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும், உலக அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதே எமது நிலைப்பாடு எனவும் அதில் மாற்றமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வு நாட்டுக்கு பல்வேறு வழிகளில் நன்மைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வந்த பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதற்கு இந்த அமர்வுகள் வழியமைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கையிலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை நேரில் பார்வையிட வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வர்த்தக மற்றும் பொருளாதார ரீதியிலும் பாரியளவில் நன்மைகள் கிடைக்கும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையானவர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டு நாடுகள் மட்டுமே புலம்பெயர் தமிழர்களுக்கு தேவையான வகையில் செயற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிகைப் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பல நாடுகளில் முழு அளவில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதற்கு பாரிய கால அவகாசம் தேவைப்பட்ட போதிலும், இலங்கை விவகாரத்தில் சில நாடுகள் துரித கதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ரவி கருணாநாயக்கவிற்கு வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கடவுச் சீட்டை நேற்றுத் தொடக்கம் டிசம்பர் 2 ஆம் திகதி வரை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம், நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

வெளிநாடு சென்ற நபர் ஒருவர் அனுப்பிய பணத்தை மத்திய வங்கிக்கு அறிவிக்காமல் தனது கணக்கில் வைப்பிலிட்டமை தொடர்பில் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனால் ரவியின் கடவுச் சீட்டு நீதிமன்றத்தால் பறிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், மாலைதீவு ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால் கடவுச் சீட்டை விடுவிக்குமாறு ரவி கருணாநாயக்க கோரிக்கை முன்வைத்துள்ளார்.

குறித்த கோரிக்கையை ஆராய்ந்த நீதிமன்றம், ரவி கருணாநாயக்கவின் கடவுச் சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# ஐ.தே.க.வை விவாதத்திற்கு அழைக்கிறது ராவணபலய

(கொழும்பு)

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றிருந்தால், அது குறித்து தம்முடன் திறந்த விவாதம் ஒன்றில் பங்கேற்குமாறு, ராவணபலய அமைப்பு, ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுக்கு எதிரான மனு ஒன்றை நேற்றைமுன்தினம் ராவணபலய அமைப்பு பிரித்தானிய உயர ஸ்தானிகரகத்திடம் வழங்கியது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ராவண பலய அமைப பின் இணைப்பாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ, மங்கல சமரவீரவை யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான விவாதத்தில் பங்கேற்குமாறு கோரினார்.

# பாப்பரசரை சந்தித்தார் கோத்தா



(கொழும்பு)

கத்தோலிக்கத் திருச்சபையின் முதல்வரான பாப்பரசர் பிரான்சிசை பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ சந்தித்து, இலங்கை வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

வத்திக்கானில் கடந்த புதன்கிழமை பார்வையாளர் அரங்கில், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபகஷ, அவரது மணைவி அயோமா ராஜபக்ஷ, வத்திக்கானுக்கான இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க, இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் பேனாட் குரே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே ஆகியோர், பாப்பரசர் பிரான்சிசை சந்தித்தனர்.

இதன்போது, பாப்பரசரை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சார்பாக கோத்தாபய ராஜபக்ஷ அழைபபு விடுத்தார்.

இதையடுத்து, வரும் மார்ச் மாதம் பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வார் என்று றோமுக்கான இலங்கைத் தூதுவர் பேனாட் குரே தெரிவித்துள்ளார்.

# ஒழுக்காற்று விசாரணை இரத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி இதுவரையில் முன்னெடுத்த ஒழுக்காற்று விசாரணைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், நாடாளுமன்ற உறுபபினர் அஷோக் அபேசிங்க மற்றும் பாலித்த ரங்கே பண்டார ஆகியோரின் அமைப்பாளர் பதவிகளும் மீண்டும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான தீர்மானத்தை கட்சியின் தலைமைத்துவ குழு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தில் கூடி மேற்கொண்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்ய விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம்

(கொழும்பு)

ரஷ்யாவின் கசான் நகரில் அண்மையில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

தமது அனுதாபத்தை வெளிப்படுத்தி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரஷ்ய ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ரஷ்யாவின் கசான் நகரில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற விமான விபத்தில் பலர் உயிரிழந்தமை குறித்த செய்தியை கேள்விற்றவுடன், ஆழ்ந்த கவலையடைந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானம் விபத்துக்குள்ளனதில், அதில் பயணித்த 50 பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு, இலங்கை அரசாங்கம் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி அனுப்பியுள்ள கடித்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிலகவை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் சாட்சியமளிக்க வருவதற்கு தவறியதை அடுத்தே கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பலப்பிட்டிய அவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்துள்ளார்.

தெகிவளை கடற்படை சாவடியில் வைத்து 3 மாணவர்கள் கடத்தப்பட்டதாக கூறப்படுவது தொடர்பான ஆட்கொணர்வு விசாரணையின் போது சாட்சியமளிக்க வருமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

அவர் சாட்சியமளிக்க வராததை அடுத்தே அவரை கைது செய்யுமாறு நீதவான் பிடியாணை பிறப்பத்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, எ.எஸ்.பி.ஜயதிலக்க ஆகியோரின் சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட இருந்தன.

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு காரணமாக அட்மிரல் வசந்த கரன்னாகொடவுக்கு அழைப்பாணை விடுக்கப்படவில்லையென வழக்குரைஞர் கெ.வி.தவராஜா சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து நீதவான் இந்த வழக்கை எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

# இலங்கை பிரஜைகளில் பலர் விரக்தியடைந்த நிலையில்

## என்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

நாட்டிலுள்ள பெரும்பாலானவர்கள் விரக்தியடைந்துள்ள நிலையில் உள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கனேமுல்ல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 65 வருடங்களில் இந்த நாடு அபிவிருத்தியடையவில்லை நிர்வாகிகள் எதனைக் கூறினாலும், பொருளாதாரம், வாழ்க்கை, சுகாதாரம், கல்வி ஆகியன சிறிது சிறிதாக பாதிக்கப்பட்டது.

இன்று எமது நாட்டில் கல்வி கற்பது என்பது ஒரு யுத்தமாக உள்ளது.

அவ்வாறெனின் இந்த நாட்டின் மனித வாழ்க்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதில்லை. நாளாந்தம் போராடும் ஓர் இனமாக மாறியுள்ளனர்.

95 வீதமான மக்கள் விரக்தியான மன நிலையிலேயே உள்ளனர். மதுவுக்கு முற்றுப்புள்ளி எனக் கூறிய போதிலும் 2000 மதுபானசாலைகளை கடந்த 7 வருடங்களில் திறந்துள்ளனர்.

2000 விகாரைகளை மூடினார்கள். அவற்றுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை. 2000 பாடசாலைகளை மூடினார்கள் என்றார்.

# இலங்கைக்கு வருகிறது ஈரான் நீர்மூழ்கிக் கப்பல்

ஈரான் நீர்மூழ்கி கப்பல் ஒன்று இலங்கை மற்றும் மும்பாய் ஆகிய இடங்களுக்கு வரவுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை இந்த நீர்மூழ்கிக் கப்பல் இலங்கையை வந்தடையவுள்ளது. ஈரானிய கடற்படையின் 28 ஆவது புளோடில்டா என்ற நீர்மூழ்கிக் கப்பலே இலங்கைக்கு வரவுள்ளது.

இந்தநிலையில் குறித்த கப்பல் இலங்கை உட்பட்ட நாடுகளுக்கு செல்வதன் காரணம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு செல்லும்போது அதனுடன் அப்பாஸ் ஹெலிகொப்டர் மற்றும் அல்போர்ஸ் தாக்குதல் விமானம் ஆகியவற்றை உள்ளடக்கிய போர்க்கப்பலும் அதற்கு துணை யாக வரவுள்ளதாக ஈரானிய தகவல்கள் தெரிவிக்கின்றன





ஏசியன் பௌண்டேசன் நிறுவனமும், முல்லைத்தீவு பொலிஸாரும் இணைந்து முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியில் நடாத்திய நடமாடும் மக்கள் சேவை அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், கலைநிகழ்வுகள் இடம்பெறுவதையும், கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (125)

# யாழில் மின்சார விநியோகம் 80 வீதமான வீடுகளுக்கு பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை எண்பது வீதமான வீடுகளுக்கு இலங்கை மின்சார சபையினால் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் 60 வீதமாக இருந்த இந்த மின்னிணைப்பு நிலை மேலும் விரிவுபடுத்தப்பட்டு 80 வீதமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 25 வீதமான வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக ஒரு இலட்சத்து இருபதாயிரம் வீடுகளுக்கு இவ்வாறு மின்னிணைப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், மேலும் 30 ஆயிரம் வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபை அதிகாரியினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய வைரவிழா போட்டி முடிவுகள்

(கைதடி)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

கிரகித்தல்

தரம் -1

செ.பானுஜா, சு.மகிழ்நிலா, நா.விதுஷன்.

தரம் -2

ஸ்ரீ.ஜஸ்வந்தினி, கி.அபி நயா, தெ.சுஜாங்கி, யே.பேபிஷா லினி. (இருவர் 3ஆம் இடம்)

தரம் -3

கா.மதுஷா, பி.மணிவண்ணன், ம.டனோஜா.

தரம் - 4

ஸ்.அஜினா, செ.அஜந்தா, செ.திலக்ஷி, சி.சர்மிகா. (3ஆம் இடம் இருவர்)

தரம் - 5

வே.குணதீபன், ர.தருண், ப.தர்மிலன். (51)

# உவர்நீர் தடுப்பணைகள் செம்மணியில் உடைப்பு,

(யாழ்ப்பாணம்)

தற்காலிக உவர் நீர் தடுப்பணைகள் செம்மணிப்பகுதியில் விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளன.

செம்மணி உப்பளம் அமைநத பகுதியில் ஏ-9 வீதியில அமைந்துள்ள மதகினால் உவர்நீர் வயல் சார்ந்த பகுதிகளுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் மண் மூடைகள் கொண்டு தற்காலிகமாக அணை கட்டப்பட்டுள்ள நிலையல் அவை விசமிகளால் உடைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவோரினாலேயே இவ்வாறு அணைகள் சேதப்படுத்தப்படுவதாக அண்மையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

உவர்நீர் தற்போதும் நன்னீர் பிரதேசத்தினுள் பாய்ந்தோடுகின்றது.

இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)

## சாமஸ்ரீ விருது விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்தும் முகமாக இருபது வருடகாலமாக அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சமயசமூக கலை கலாசார ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தி ஜீவிகளும், வர்த்தகர்களுக்குமான சாம ஸ்ரீ சமூக சேவையாளருக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி பொது மண்டபத் தில் இன்று பி.ப.1.30 மணிக்கு அகில இன நல்லுறவு ஒன்றியத் தின் தலைவர் ஆனந்த சரத் மல ஹர ஆராச்சி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அல் ஹாஜ் நஜீப் ஏ.மஜித் விசேட அதிதியாக கிழக்கு மாகாண சபையின் தலைவர் ஆரியவதி கலப்பதி, சிறப்பு விருந் தினராக திருமலை மறை மாவட்ட ஆயர் அதிவண மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்வர் யாழ்ப்பாணத்திலிருந்து 10 இற்கு மேற்பட்டோர் இவ்விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (52)

## பளை வைத்தியசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பளை பிரதேச வைத்தியசாலையின் புதிய கட்டடம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது. யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்து தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள. இக்கட்டடத்தை வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் திறந்துவைக்கவுள்ளார். இவ்வைத்தியசாலைக் கட்டடம் திறக்கப்படுவதால் பளை பிரதேசத்திலுள்ள இத்தாவில், முகமாலை, புலோப்பளை, வண்ணாங்குளம், புதுக்காடு, காயம்பாதி, மல்லி, இயக்கச்சி, கோயில்வயல், போன்ற பகுதிகளில் மீள் குடியேறியுள்ள மக்கள் வைத்திய சேவைகளை பெற்றுக் கொள்ள ஏதுவாக அமைவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

## அறிக்கையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ஊடகத்துறையின் அடிப்படைகள் என்ற குறுங்கால பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தமது கல்விப்புலம் மற்றும சமூகம்சார்ந்த தேடல்களின் அறிக்கை செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளதுடன் இன்று சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெறும் இதில் பயிற்சி பெற்ற 25 ஆசிரியர்கள் கலந்து கொள்கின்றனர். (சி)

# மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர்செய்வதற்காகவும், பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை, முகாவில், மல்வில், கரந்தாய், கோவில்வயல், இயக்கச்சி, பனிக்கையடி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(23.11.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 07 ஆம் திகதி.
சித்தம்/சஷ்டி. பூச நட்சத்திரம் பி.இ. 01.44 வரை.
பின் ஆயிலியம்.
இராகுகாலம 09.11 - 10.41 வரை. சுபநேரம 03.11 - 04.41 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள இலவச நடமாடும் சேவைக்குச் சமூகமளிப்பு, காலாவதியான உணவுப் பொருளினால் ஒவ்வாமை ஏற்பட்டு நலம் பாதிப்படைதல். |
| ரிஷபம் | வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் சொத்தினை அடகு வைத்துப் பணம் பெறமுயற்சி, பொறுமை சகிப்புத் தன்மை நம்பிக்கையுடன் செயற்பட்டதால் புயல் போல் வந்த துயர் தென்றலாகிப் போதல். |
| மிதுனம் | போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தும் நியமனம் கிடைக்காமையினால் விரக்தி, திடீரென மனதில் உதித்த கற்பனையை விற்பனைப் பொருளாக்க முயல்வதால் தொழில் சிறப்படையும். |
| கடகம் | ஆயுர்வேத மருத்துவர்கள் ஆங்கில மருந்து பாவனையால் வழக்கிற்கு முகங்கொடுத்தல், டெங்கு நோய் பரவாமலிருக்க குடும்பத்தவருடன் சேர்ந்து சூழலைத் தூய்மையாக்கும் பணியில் ஈடுபடல். |
| சிம்மம் | சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் தேக நலத்தில் கவனமெடுத்ததால் நோய் அணுகாமை, பிறரிடம் ஆலோசனைகேட்டபின் நீங்களாகவே முடிவெடுப்பது நன்மை பயக்கும். |
| கன்னி | செயற்பாடுகளில் முன்யோசனையுடன் குளறுபடிகள் ஏற்படாமை, சீர்கெட்டிருந்த மருமகள் மாமியார் உறவு சீரடைதலால் பிரச்சினை விலகல். |
| துலாம் | மாற்று வலுவுள்ளோர் சம்மேளனத்தில் நிர்வாகியாக தெரிவுசெய்யப்படல், எதிர்கால நன்மை கருதி உறவுக்கு கைகொடுக்க முன்வருதல். |
| விருச்சிகம் | யதார்த்தவாதி வெகுஜன விரோதியாதல், வேலைக்கு ஆட்களைச் சேர்க்கையில் கல்வித் தகைமையுடன் அனுபவத்தையும் பார்ப்பதினால் விருத்திப் பாதை திறத்தல். |
| தனுசு | அரசின் கவனத்தை ஈர்க்க கோரிக்கைகளை முன்வைத்து போராட்ட முஸ்தீபு, நகைச்சுவையும் இனிமையும் காணப்படுவதினால் முரண்பாடுகள் மின்னல் போல் மறைய ஆரம்பிக்கும். |
| மகரம் | வியாபார விருத்திக்கு வாடிக்கையாளர்களைக் கவர புதிய யுக்தி கையாண்டதால் இலாபம் அதிகரித்தல், நம்பகம் உறுதிப்படுத்தப்பட்டதால் வீடு வாடகைக்கு விட உத்தேசித்தல். |
| கும்பம் | தொழிலுக்கு முதலீடு செய்ய பணத்தேவைக்காக நகையை அடகு வைக்க முயல்தல், பரீட்சை நெருங்குவதால் தொலைக்காட்சியில் ஊறிப்போயிருக்கும் மகனைக் கண்டித்ததால் ரகளை. |
| மீனம் | தொழில் ஆரம்பிக்க உரிய காலம் பற்றிசோதிடம் பார்க்க முயலுதல், இடம்/சூழ்நிலை கண்டு பேச்சை ஆரம்பிப்பதால் பாராட்டுக்கிடைக்கும். |

# ஆஷஸ் முதல் டெஸ்ட்; வெல்லப்போவது யாரு?

(பிறிஸ்பேன்)

ஜோன்சனின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 136 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் பிறிஸ்பேனில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. ஒரு முனையில் சிறப்பாக ஆடிய ஹடின் 94 ஓட்டங்களைப் பெற்றவேளை ரன் அவுட் முறையில் வெளியேற அவுஸ்ரேலிய அணியின்



முதல் இனிங்ஸ் நிறைவுக்கு வந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹடின் 153 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 94 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஜோன்சன் 64, டேவிட் வோர்னர் 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரூவெட் புரொட் ஆறு, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஜோன்சனின் பந்து வீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் மளமளவெனப் பறிகொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று சுருண்டது. இதில் கெர்பொரி 40, ஸ்ரூவெட் புரொட் 32, கெவின் பீற்றர்சன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்சன் நான்கு, ஹரிஸ் மூன்று, நதன் லயன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

159 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டேவிட் வோர்னர் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பத்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 224 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



## 2 வருடங்களின் பின் ஒரு நாள் அணியில் கலிஸ்

(ஜோகனஸ்பேர்க்)

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு, தென்னாபிரிக்க அணியில் சகலதுறைவீரர் கலிஸ் மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் நட்சத்திர வீரர் கலிஸ் (வயது-38). இதுவரை 164 டெஸ்ட் (13140 ஓட்டங்கள், 288 விக்கெட்), 321 ஒருநாள் (11498 ஓட்டங்கள், 270 விக்.,), 25 சர்வதேச ருவென்ரி-20 (666 ஓட்டங்கள், 12 விக்.,) போட்டிகளில் விளையாடி உள்ளார். ஒருநாள் போட்டியில் இடம் கிடைக்காமல் தவிக்கும் இவர், கடைசியாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நியூசிலாந்துக்கு எதிராக நேப்பியரில் நடந்த ஒருநாள் போட்டியில் விளையாடினார். 21 மாதங்களுக்கு பின், மீண்டும் ஒருநாள் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தான் (நவம்பர், 24-30) மற்றும் இந்தியாவுக்கு (டிசம்பர்., 5-11) எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. இத்தொடருக்கான 14 பேர் கொண்ட வீரர்களை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் சகலதுறை வீரர் கலிஸ் தேர்வு செய்யப்பட்டார். திருமணம் காரணமாக டுபிளசி இடம்பெறவில்லை. சுழற்பந்து வீச்சாளர் ரொபின் பீற்றர்சனுக்கு பதிலாக மற்றொரு சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிர் தேர்வு செய்யப்பட்டார். காயத்தில் இருந்து மீண்ட கிரீம் ஸ்மித்துக்கு இடம் கிடைத்துள்ளது.

அணி விபரம்: டிவில்லியர்ஸ், ஹசிம் அம்லா, குயின்டன் டி கொக், டுமினி, இம்ரான் தாஹிர், கலிஸ், ரேயான் மெக்லாரன், டேவிட் மில்லர், மோர்கல், பார்னல், பிலாண்டர், கிரேம் ஸ்மித், ஸ்ரெய்ன், டிசாட்சொபே.

## வெளியேற்றம்




(ஹொங்கொங்)

ஹொங்கொங் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் இரண்டாவது சுற்றுடன் சாய்னா வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஹொங்கொங் ஓப்பன் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், 17-21, 21-9, 15-21 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் பொர்ட்னிப்பிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.

தோல்வி மிகுந்த வேதனை அளிக்கிறது. இருப்பினும் அடுத்துவரும் தொடர்களில் சிறப்பாக செயற்படுவேன் என தோல்வியின் பின் சாய்னா தெரிவித்தார்

## எட்டு ஆண்டுகளின் பின் திரண்ட சனத் திரள்

கடந்த எட்டு ஆண்டுகளில் அதிகமானோர் கண்டுகளித்த டெஸ்ட் போட்டியாக சச்சின் டெண்டுல்கரின் இறுதி டெஸ்ட் அமைந்துள்ளது.

இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் அண்மையில் மும்பையில் நிறைவடைந்த இப்போட்டியைக் காண ஆயிரக்கணக்கான இரசிகர்கள் அரங் கில் நிரம்பி வழிந்தனர்.

போட்டியை நேரில் பார்க்க முடியாத கோடிக்கணக்கானஇரசிகர்கள்தொலைக் காட்சியில் கண்டுகளித்தனர். மட்டுமின்றி உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் இரசிகர்கள் தொலைக்காட்சியில் பார்த்தனர். டெண்டுல்கர் விளையாடிய இந்தப் போட்டியை ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புச் செய்தது.

டெண்டுல்கர் விளையாடிய 3 நாட்களிலும் ஸ்டார் டி.வி.யில் அதிக இரசிகர்கள் பார்த்து இரசித்தனர். கடந்த 8 ஆண்டுகளில் ஸ்ரார் தொலைக்காட்சியில் அதிகம் பேர் பார்த்த ஆட்டம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சி சராசரி பார்வையாளர்கள் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 17.4 இலட்சம் என்ற சாதனை படைத்துள்ளது.

போட்டி முடிந்ததும் டெண்டுல்கர் மற்றும் அவரது மனைவி அஞ்சலி ஆகியோரின் பேட்டியையும் நேரடியாக ஒளிபரப்புச் செய்தது. டெண்டுல்கர் விளையாடிய கடந்த கால போட்டிகளில் முக்கியமான விறுவிறுப்பான ஆட்டங்களையும் ஒளிபரப்புச் செய்தது.

மேலும், டெண்டுல்கரின் 24 ஆண்டு கால கிரிக்கெட் வீடியோ தொகுப்பையும் ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சி தயாரித்து வெளியிட திட்டமிட்டுள்ளது.

## தலைமைக்கு ஆபத்தில்லை

எதிர்வரும் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் வரை பாகிஸ்தான் அணியின் கப்டனாக தொடர்ந்தும் மிஸ்பா உல் ஹக்கே செயற்படுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்வியை சந்தித்ததால் கப்டன் பதவியில் இருந்து 39 வயதான மிஸ்பா உல்ஹக்கை மாற்ற வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால் இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேதி கருத்து தெரிவிக்கையில், 2015ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டி வரை மிஸ்பா உல்ஹக் கப்டனாக நீடிப்பார் என்றார்.



## கிழிந்தது தசைநார்

(கொச்சி)

கொச்சியில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் 2ஆவது பந்திலேயே ரன்அவுட் ஆனார். ரன்அவுட் வாய்ப்பில் இருந்து தப்பிக்க வேகமாக ஓடிய போது, அவர் மைதானத்தில் நிலை தடுமாறி விழுந்தார். அவரது கால் முட்டி மைதானத்தில் பலமாக மோதியது. வலியால் துடித்த அவரை ஸ்ரெச்சர் மூலம் தூக்கிச் சென்றனர்.

உடனடியாக அவருக்கு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில், இடது காலில் தசைநார் கிழிந்திருப்பதும், சிறிது இரத்தம் உறைந்திருப்பதும் தெரியவந்தது. அவரது காயம் குணமடைய குறைந்தது 2 முதல் 4 வாரங்கள் ஆகும் என்று வைத்தியர்கள் கூறியுள்ளனர். எனவே அவர் இந்தியாவுக்கு எதிரான எஞ்சிய ஒரு நாள் தொடரில் விளையாட வாய்ப்பில்லை.

இதேவேளை, எஞ்சியுள்ள போட்டிகளில் கிறிஸ் கெய்ல் ஆட முடியாத நிலை ஏற்பட்டது எமக்கு பின்னடைவுதான். இருப்பினும், அடுத்து இடம்பெறவுள்ள போட்டிகளில் வெற்றிபெற முனைப்புடன் போராடுவோம் என மேற்கிந்தியத்தீவுகள் அணி கப்டன் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

## தொடர் இலங்கை வசம்




(பல்லேகல)

நியூசிலாந்துக்கு எதிரான ருவென்ரி-20 தொடரை இலங்கை அணி 1-0 எனக் கைப்பற்றியது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ஆவது போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இலங்கை வந்த நியூசிலாந்து அணி, இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச ருவென்ரி-20 தொடரில் பங்கேற்றது. முதல் போட்டி கனமழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாதநிலையில் இரத்துச் செய்யப்பட்டது. இரண்டாவது போட்டி பல்லேகலயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. . நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லூஷ்க் ரோஞ்சி 34, லதாம் 20, நதன் மக்கலம் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மலிங்க, குலசேகர, மத்தியூஸ், அஜந்த மெண்டிஸ் திசார பெரேரா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 17.5 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் குசால்பெரேரா 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டில்சான் 59, சங்கக்கார 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இதன்மூலம் இலங்கை அணி, இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச ருவென்ரி-20 தொடரை 1-0 எனக் கைப்பற்றி கோப்பை வென் றது. ஆட்டநாயகன் விருது குசால்பெரேராவுக்கு வழங்கப்பட்டது. இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் சமநிலையில் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுச் செய்திகள்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 68ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியின் இரண்டாவது சுற்று நேற்று முன்தினம் காலை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியினால் ஆரம்பித்துவைத்தபோது... இப்போட்டிகள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை இடம்பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 3ஆவது ஆசிய கிண்ண கூடைப்பந்து இன்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

மூன்றாவது ஆசிய கிண்ண 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கூடைப் பந்தாட்ட போட்டித் தொடர் இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டியில் விளையாடிவெற்றி பெறும் மூன்று அணிகள் அடுத்த வருடம் நடைபெறும் உலகக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டியில் விளையாட தகுதிபெறும்.

இதேவேளை இலங்கையில் இடம் பெறும் இப்போட்டியில் 12 சர்வதேச அணிகள் கலந்துகொள்கின்றன.

இதில் பிரிவு- 1இல் இருந்து சீனா, சீன தாய்பே, ஜப்பான், கொரியா மற்றும் மலேசியா, இந்திய அணிகள் பங்கேற்கின்றன. இதில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு செல்லும்.

அத்துடன் பிரிவு 11இல் இருந்து போட்டியை நடாத்தும் இலங்கை, கொங்கொங், தாய்லாந்து, இந்தோனேசியா, கஸகஸ்தான், ஜோர்தான் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன. பிரிவு- 11இல் இரு அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். இலங்கை கூடைப்பந்தாட்ட வரலாற்றில் இலங்கையில் இடம்பெறும் முதலாவது சர்வதேசப் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

3ஆவது ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டி தொடர்பாக செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் சிரேஷ்ட உதவித் தலைவர் ரணில் பிரன்ஸ்கோ. இலங்கையில் இப்படி யான சர்வதேசப் போட்டிகள் இடம்பெறுவதால் நாட்டில் உள்ள கரப்பந்தாட்ட வீரர்கள் பல் வேறு நாட்டு வீராங்கனைகளுடன் பழகி, அவர்களின் அனுபவங்களைப் பெறுவார்கள். அதுமட்டுமல்லாமல் இலங்கைகூடைப் பந்தாட்ட வரலாற்றில் ஒரு சர்வதேசப் போட்டி இடம்பெறுவது இதுவே முதற் தடவையாகும்.




இப்போட்டியைக் கண்டுகளிப்பதற்கு முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள் கலந்துகொள்ள முடியும். அது மட்டுமல் . லாமல் பாடசாலை மாணவர்களும் போட்டியை கண்டுகளிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அவர்களுக்கான அழைப்பிதழ்கள் பாடசாலைகளுக்கு சங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றார்.

## கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் இறுதிக்கு தகுதி பெற்ற அணிகள்

(மானிப்பாய்)

வடமாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றன.

கரப்பந்து, வலைப்பந்து, மென்பந்து கிரிக்கெட், கால்பந்து, பூப்பந்து, கபடி, சதுரங்கம், கரம் போன்ற பல போட்டிகள் இடம் பெறுகின்றன.

இதில் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கல்வி அமைச்சு அணியும் உள்ளூராட்சி அமைச்சு அணியும் தகுதி பெற்றுள்ளன.

அதேவேளை பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகளில் 3 அமைச்சுக்களின் அணிகள் மட்டும் பங்குபற்றியிருந்தன. அந்த அணிகளுக்கிடையில் நடைபெற்ற லீக் முறையிலான ஆட்டங்கள் அடிப்படையில் உட்கட்டமைப்பு அமைச்சு அணியும், பிரதம செயலக கொத்தணி அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

இதுவரை காலமும் ஆளுநர் வெற்றிக்கிண்ண போட்டிகள் என நடாத்தப்பட்ட மேற்படி போட்டிகள், இவ்வருடம் வட மாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் என நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## யாழ்ப்பாணத்துச் சமர்; றோயல் அபார வெற்றி

(உரும்பிராய்)

யாழ்ப்பாணத்துச் சமர் கால்பந்து போட்டித் தொடரில் லீக் ஆட்டமொன்றில் ஊரெழு றோயல் அபார வெற்றி பெற்றது.


ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணத்துக் கால்பந்துச் சமர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் 68இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன. முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்தன, தற்போது இரண்டாவது சுற்று ஆட்டங்கள் லீக் அடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டு தமது சமபலத்தை நிரூபித்தவண்ணமிருந்தன. இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஊரெழு றோயல் அணியும், அரியாலை ஐக்கியம் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஊரெழு றோயல் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல் மழை பொழிந்து இரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்தியது. இறுதியில் ஊரெழு றோயல் அணி 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும், லீக் சுற்று நிறைவடைந்த பின்னர் புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்கு அணிகள் தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றில் மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை ஹென்றிஸ், குருநகர் பாடுமீன், நாவாந்துறை சென். மேரிஸ், அரியாலை ஐக்கியம், ஊரெழு றோயல் போன்ற முன்னணி அணிகள் விளையாடி வருவதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

(93)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளுக்கான மாகாண மட்ட கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் யாழ்ப்பாணம் ஜே.கே.எம்.ஓ. கழகத்தின் சார்பில் பங்குபற்றிய போட்டியாளர்கள் பலர் பதக்கங்களை வென்றனர். பதக்கங்களை வென்ற ஜே.கே.எம்.ஓ. கழக வீரர்களுடன் அதன் பிரதம ஆசிரியர் றேமனும் நிற்பதைக் காணலாம்.

## மெய்வல்லுநர் சங்க நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த வாரம் யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

மெய்வல்லுநர் சங்கத் தலைவராக செ.ரமணன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக சு. சுகிர்தன்,பொருளாளராக ம. மோகனதாஸ், உபசெயலாளராக க. கஜேந்திரன், உப தலைவர்களாக முரளிதரன், நாகேந்திரம், கருணாகரன், சதீஸ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக உறுப்பினர்களாக சுபாஸ்கரன், சுதாகரன், திலக், ராதை அருளம்பலம், சதீஸ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, எதிர்வரும் ஆண்டில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் வீர,வீராங்கனைகளின் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ரமணன் தெரிவித்துள்ளார். (93)

மாயம் ஒன்றுமில்லை. அதன் முதலாளி இன்னொரு ஸ்டீவ் ஜொப்ஸ். அவர் எலொன் மஸ்க். இவர் பேபால் (PayPal) ஆரம்பித்தவர். அதை காலம் ஆகிவிட்டது. ரெஸ்லா இவற்றில் இருந்து மாறுபடு கிறது. 93% புத்துருக்கோடு உருவானது.

காரின் முகப்பில் இருக்கும் மூடியைத் திறந்து பார்த்தால், கார் ஒன்றும் புதிது இல்லை. இதற்கு முன்பே நிஸ்ஸான், செவர்லே போன்ற பல நிறுவனங்கள் மின்னூட்டத்தில் உயிர் பெற்று ஓடும் கார்களை உற்பத்தி செய்கின்றன. மற்ற “தேவா இசையில் ஹரிஹரன் பாடிய பாடல்களைப் போடு” எனலாம். “குளிர் எழுபத்திரண்டு டிகிரி வை” என கட்டளை இடலாம். சாலையில் போக்குவரத்து

# எந்தக் காரிலும் இல்லாத ஒன்று...



- பாஸ்டன் பாலா -

எண்பதாயிரம் டொலர் (கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா) பெறுமானமுள்ள கார் எரிந்து போனாலும், அதையே மறுபடி வாங்குவேன் என்கிறார் மேரிலாந்து டாக்டர். இது “ரெஸ்லா” (Tesla) நிறுவனத்தின் மின்சாரக் கார். உலகின் விலையுயர்ந்த கார் ஓடினாலும் செய்தி... எரிந்தாலும் செய்தி என்பதாக இந்த விபத்து நிகழ்ச்சி யூட்யூபில் பகிரப்பட்டு பரவலாக பேசப்பட்டு பார்க்கப் பட்டது. இந்த மாதத்தில் மட்டும் மூன்று கார்கள் எரிந்துபோனது.

இந்த செய்திகளால் ரெஸ்லா நிறுவனத்தின் பங்குகள் 17 சதவிகிதம் சரிந்திருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த வருட ஆரம்பத்தில் ரெஸ்லாவின் மொத்த சந்தைமுதலே நான்கு பில்லியனாகத்தான் இருந்தது.

நான்கு பில்லியனில் வருடத்தைத் துவக்கிய நிறுவ-னம் எப்படி ஆறு மடங்காக (600% !!!) வளர்ச்சி கண்டு 24 பில்லியனைத் தொட்டது? ஒன்றரை பில்லியன் டொலருக்கு விற்றவர். விற்ற கையோடு மண்ணிலிருந்து வான்வெளிக்கு மக்களை அழைத்துச் செல்லும் ஸ்பேஸ்-எக்ஸ் (SpaceX) துவங்கினார். கூடவே ரெஸ்லாவும் தொடங்கினார். வேகமாக காரை ஓட்டுபவர்களும் இளமையான காரை வேண்டுபவர்களும் விரும்பும் ரோட்ஸ்டர் (Roadster) காரை உருவாக்கினார். அதன் அடுத்த தலைமுறையாக மொடல் எஸ் (Model S) உருவாகி இருக்கிறது.

மற்ற புதுக்கார்களுக்கும் இந்த ரெஸ்லா காருக்கும் என்ன வித்தியாசம்?

ஒவ்வொரு வருடமும் புது ரக கார்களை நிறுவனங்கள் அறிமுகம் செய்கிறார்கள். ஆனால், அவை எல்லாமே சென்ற வருடத்தின் பழுதுகளை நீக்கி கொஞ்சம் புதுக் கணினி உள்ளே போட்ட கார்கள். அடியில் இருந்து முடி வரை புத்தம்புதிதாக கார் கண்டுபிடித்து கன உள்ளே மகிழுந்தின் இரண்டாயிரத்தி முன்னூற்றி எழுபத்தி நான்கு உதிரிப்பாகங்கள் இருக்கும். அவை எல்லாம் எங்கெங்கோ இணைக்கப் பட்டிருக்கும். எல்லாவற்றையும் பொறி இயக்கும். ரெஸ்லாவின் முன்பக்கத்தை திறந்தால் உங்கள் பெட்டி படுக்கைகளை வைத்துக் கொள்ளலாம்.

இவை எல்லாவற்றையும் விட வண்டிக்கு பெட்ரோல் போட வேண்டாம். வண்டியைக் கொண்டு வந்து வீட்டில் நிறுத்திவிட்டால் போதுமானது. அதுவே போய் சொருகிக் கொண்டு மின்சாரத்தை வேண்டிய மட்டுமே இழுத்து தன்னுடைய மின்கலங்களை நிரப்பிக் கொண்டுவிடும். ஒரு தடவை நிரம்பிய மின்கலம் கொண்டு ஐநூறு கிலோமீற்றர் செல்லலாம். அதன் பிறகு மாற்று மின்கலம் போட ஒன்றரை நிமிடங்களே எடுக்கும். அல்லது ஓய்விடத்தில் மறுபடியும் மின்கலத்திற்கு மின்சாரம் ஏற்றலாம்.

மின்விசையில் செல்லும் நிறுவனங்கள் எல்லாம் ஒரு பெரிய மின்கலனை வைத்துக் கொண்டு அதில் சக்தி பெற்று ஓடுகின்றன. ஆனால், ரெஸ்லா கார், ஏழாயிரம் லித்தியம் மின்கலஅடுக்குகளைக் (lithium-ion batteries) கொண்டு காரை நகர்த்துகிறது.

ஆனால், ஒரே ஒரு பிரச்சினை. அருகருகே லித்தியம் மின்கலங்களை அடுக்கும்போது தீப்பிடிக்கும் ஆபத்து வருகிறது.


இதை டெஸ்லா சோதிக்க வில்லையா?


ஒவ்வொரு பகுதியிலும் கடுமையான பாதுகாப்பு பரீட்சார்த்தங்கள் செய்கிறார்கள். இந்த விபத்துகளில் கூட எந்தவிதமான உயிர் இழப்பும் ஏற்படவில்லை. பற்றரியில் ஓட்டை விழுந்த உடனேயே கம்ப்யூட்டர் திரையில் அபாய விளக்கு எரிந்திருக்கிறது. ஓட்டுநரை ஓரங்கட்ட சொல்லி இருக்கிறது. அவரும் காரை ஒதுக்குப் புறமாக நிறுத்தி, அதனுள்ளே இருந்த தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு தள்ளி நின்றபின்பே புகைய ஆரம்பித்து இருக்கிறது.

மற்ற கார்களைப் போல் ரெஸ்லாவில் எந்தவிதமான திருகல்களும் ரேடியோ பொத்தான்களும் குளிரூட்டுவதற்கான விசைகளும் கிடையாது. உங்கள் கணனித்திரை போல் பதினேழு இன்ச்சில் பெரிய வெள்ளித்திரை. அதோடு பேசலாம். நெரிசல் மிகுந்த பகுதிகளைத் தவிர்க்கச் சொல்லலாம்.

இந்த வருடம் மட்டும் இருபதாயிரம் ரெஸ்லா கார்கள் விற்கும். ஒரு ஒப்புமைக்கு மாஸ்டா (Mazda) நிறுவனம், ஒன்றேகால் மில்லியன் கார்களை ஆண்டுதோறும் விற்கிறது. ஆனால், பங்குச்சந்தையில் ரெஸ்லா நிறுவனத்தை மாஸ்டா-வை விட அதிகமாக மதிப்பிடுகிறார்கள்.

அவர்களிடம் எல்லாம் இல்லாத எது ரெஸ்லாவிடம் இருக்கிறது?





முதலில் செய்து முடிக்கும் திறனை முடுக்கி விடும் எலொன் மஸ்க். கடைசியாக கார் பந்தாவாக தோற்றமளிப்பது மட்டுமல்லாமல் அமெரிக்க பிரபலங்களான ஜே லீனோ முதல் வில் ஸ்மித் வரை வாங்கித் தள்ளும் மோக வேகம்.

# முகம் பொலிவு பெற...



- மஞ்சள் பூசிக் கொள்வது சருமத்தை மென்மையாக்குவதுடன் கவர்ச்சியூட்ட வல்லது.
- ஒரு நாளைக்கு ஒருவேளையாவது ஒலிவ் எண்ணெய் கொண்டு முகத்தைத் தேய்த்து வந்தால் முகம் மினுமினுப்பு பெறும்.
- அவரை இலையின் சாறை முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து நீராடினால் முகம் பளபளப்பு அடையும்.
- நன்கு பழுத்த வாழைப்பழத்தை ஒலிவ் எண்ணெயுடன் சேர்த்துப் பிசைந்து முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து முகம் கழுவி வந்தால் முகம் புதுப்பொலிவு பெறும்.
- இரவு புல்லின் மீது மெல்லிய துணியை விரித்து வைக்கவும். அதிகாலை அந்தத் துணியைப் பிழிந்து முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளக்கும்.
- தோடம்பழச்சாறு சிறிதளவு எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் லேசாகத் தடவி விடவும். 20 நிமிடங்கள் கழித்து பயத்தம் மா அல்லது சீயக்காயை முகத்தில் தேய்த்து தண்ணீரால் கழுவி விடுங்கள். முகம் பளபளக்கும்.
- எருமைத் தயிரில் சிறிது கசகசாவைச் சேர்த்து அரைத்துத் தினமும் படுக்கச் செல்லும் முன்பாகத் தடவி வந்தால் முகம் பளபளப்பதுடன் சுருக்கங்கள் நீக்கிப் பொலிவு தரும்.
- நன்றாகக் காய்ந்த பழுப்பு நிற அரச மர இலைகளை எரித்துச் சாம்பலாக்கி, அத்துடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து உடம்பில் தடவி வந்தால் முகம், நெற்றி பளபளப்பாகும். தீப்புண், உடம்பில் புண் மற்றும் தழும்புகள் இருந்தால் விரைவில் அவை மறையும்.
- காய்ந்த ஆவாரம் பூ, பாசிப்பயறு இரண்டையும் சேர்த்து சோப்பிற்குப் பதில் குளிக்கும்போது உடம்பில் பூசி, முகத்திலும் பூசி வந்தால் முகம், உடம்பு பளபளப்பாகும்.
- ரோஜா இதழ்களைப் பன்னீர் விட்டு அரைத்து அதனைத் தினமும் தடவி வந்தால் ஆரம்ப நிலையில் உள்ள முகப் பருக்கள் உடனே அகன்று விடுவதுடன் முகத்திற்கும் அழகு சேர்க்கும்.
- தேங்காய் எண்ணெய், எலுமிச்சைச் சாறு, சந்தனம் மூன்றையும் சம அளவில் கலந்து முகத்தில் தடவி வந்தால் பரு மறையும்.
- சந்தனம் தடவி வந்தாலும் பரு மறையும்.
- வெங்காயத்தைப் பாதியாக நறுக்கி, பரு உள்ள இடத்தில் அழுத்தித் தேய்த்தால் முகப்பரு மறைந்துவிடும்.
- முகப் பருவைக் கிள்ளிவிடவே கூடாது. அவ்வாறு செய்தால் முகத்தை விகாரமாக்குவதுடன் புண்ணாகிவிடும்.

முகப் பொலிவிற்கு எண்ணற்ற இயற்கை முறைகள் இருக்க, செயற்கையான இரசாயனப் பொருட்கள் கலந்த அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவது தேவைதானா?

# கோவேறு கழுதை!




- ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறக்கும் கலப்பினப் பிறவிதான் கோவேறு கழுதை என்று அழைக்கப்படுகிறது.
- இவை குதிரைகளை விட அதிக வலிமை உடையவை. கழுதைகளை விடப் புத்திசாலிகள்.
- கவனமுடன் மலையேறுவதில் திறமை வாய்ந்தவை.
- கழுதையின் உடலில் 62 குரோமோ சோம்களும் குதிரையின் உடலில் 64 குரோமோசோம்களும் உள்ளன. ஆனால் கோவேறு கழுதையின் உடலில் 63 குரோமோசோம்கள் உள்ளன.
- குதிரையை விடக் குறைவான உணவை எடுத்துக்கொண்டு, கடினமாக உழைக்கக்கூடியது. அதனால்தான் விவசாயிகள் நிலத்தை உழுவதற்குக் கோவேறு கழுதைகளைப் பயன்படுத்துகிறார்கள்.
- இந்திய இராணுவத்தில் வீரர்களுக்குத் தேவையான துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் மலைப் பகுதிகளில் சுமந்து செல்ல கோவேறு கழுதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சுமார் 72 கிலோ வரை எடையைச் சுமந்துகொண்டு 26 கிலோமீற்றர் தூரம் ஓய்வில்லாமல் நடந்து செல்லும் ஆற்றலுடையது.
- இவைகளால் இனவிருத்தி செய்ய இயலாது. இயற்கையாகவே மலட்டுத் தன்மையுடன் காணப்படுகின்றன.
- ஆனால் இவற்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம்.

# சமூக வலைத் தளங்கள்

**- அ.மார்க்ஸ் -**

**நா**னெல்லாம் கல்லூரியில் படிக்கும்போது செய்தி ஊடகம் என்றால், அது அச்சு ஊடகம்தான். பிறகு தொலைக்காட்சி சேர்ந்து கொண்டது. ஒவ்வொரு தொலைக்காட்சியும் இப்போது ஒன்று அல்லது இரண்டு செய்தித் தொலைக்காட்சிகளை நடத்துகின்றன. உடனுக்குடன் போட்டி போட்டுக் கொண்டு செய்திகள் ஊரெங்கும் பரவி விடுகின்றன. காட்சி ஊடகங்கள் இப்படி உடனுக்குடன் செய்திகளைச் சொல்லி விடுவதால், அடுத்த நாள் காலை வரும் நாளிதழ்கள் வெறுமனே செய்திகளை மட்டும் சொல்லாமல் அது தொடர்பான வேறு முக்கிய தகவல்களையும் சேகரித்துத் தர வேண்டியவையாக மாறியுள்ளன.

ஊடகங்களுக்குள் உள்ள போட்டியால் செய்திகள் குறித்து விவாதங்கள் நடத்துதல், அது தொடர்பான வல்லுனர்கள் மற்றும் மாற்றுக் கருத்துடையவர்களின் கருத்துக்களை எல்லாம் கேட்டு முன்வைத்தல் என்பதெல்லாம் இன்று நடைமுறைக்கு வந்துள்ளன. செய்திப் பத்திரிகைகள் வண்ணப் படங்களோடு நம்ப இயலாத அளவிற்குக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவை எல்லாம் இன்று செய்திப் பரவலில் வரவேற்கத் தக்க ஒரு சனநாயக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.





கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள இன்னொரு புதிய மாற்றம் இந்த ஃபேஸ்புக், ட்விட்டர் முதலான சமூக வலைத் தளங்கள். இது செய்திப் பரவலில் ஏற்பட்டுள்ள இன்னொரு பெரிய புரட்சி. பழைய ஊடகங்களில், அதாவது அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் முன்தணிக்கை சாத்தியம். இவற்றை உரிமையாகக் கொண்டுள்ள பெரு முதலாளி களின் அரசின் கருத்துச்களுடன் பெரிய அளவில் மாறுபடுவதில்லை. எனவே அரசுக்கும் கார்பொரேட் நலன்களுக்கும் உவப்பாக இல்லாத செய்திகள் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்தப் புதிய ஊடகங்களும்கூட பெரும் பன்னாட்டுக் கார்பொரேட்களின் கையில்தான் உள்ளன என்ற போதிலும், இந்தப் புதிய தொழில் நுட்பத்தின் தன்மை முன்தணிக்கையைச் சாத்தியமில்லாமல் செய்து விடுகிறது. எனவே இதில் பங்கு பெறுபவர்கள் மிகவும் சுதந்திரமாகத் தம் கருத்துக்களை எந்தத் தடையும் இன்றி உடனுக்குடன் பதிவேற்றம் செய்து, அது அடுத்த கணமே உலகெங்கிலுமுள்ள பார்வையாளர்களுக்குக் காணக்கிடைக்கிறது. எழுதுபவர்கள் உடனடி எதிர்வினையையும் பெறமுடிகிறது.

மிகவும் பொறுப்புடனும், அரசியல் கூர்மையுடனும் பயன்படுத்தினால் வலிமை வாய்ந்த சர்வாதிகாரிகளையே இந்த ஊடகங்களின் துணையோடு வீழ்த்திவிட முடியும் என்பதற்கு சமீபத்திய அரபுலகப் புரட்சிகள் ஒரு உதாரணமாகத் திகழ்கின்றன. துனீசியாவிலும் எகிப்திலும் இருபது முப்பதாண்டுகாலம் கொடுங்கோல்ஆட்சி நடத்திய சர்வாதிகாரிகள் தூக்கி எறியப்பட்டு சனநாயகம் தழைத்ததில் முக நூலுக்கு ஒரு முக்கிய பங்குண்டு..

எனினும் முன்தணிக்கை இல்லாத சூழலில் எழுதுபவர்களுக்குப் பொறுப்பு அதிகமாகிறது. குறிப்பாக அவதூறுகள் பேசுவது, வெட்டி அரட்டை அடிப்பது, மாறுபட்ட கருத்துக்களை எதிர்கொள்ள இயலாதபோது எந்த ஆதாரமும் இன்றி பொய்க் குற்றச் சாட்டுகளை முன்வைப்பது என்பதெல்லாம் தமிழ்ச் சூழலில் அதிகமாகக் காணப்படுகிறது. பெண்களாயின் பாலியல் ரீதியாகச் சீண்டுவது, அவதூறு செய்வது என்பதும் இங்கு அதிகம். பாடகி சின்மயி விவகாரத்தில் இது கூர்மையாக வெளிப்பட்டது. பொறுப்பற்ற முறையில் கருத்துச் சொல்வதற்குச் சின்மயி ஒரு எடுத்துக்காட்டு என்றால், அதை ஒட்டி அவதூறு செய்து துன்புறுத்தியதற்கு அவரை எதிர்த்தவர்கள் உதாரணமானார்கள். பொறுப்புடனும் அற உணர்வுடன் கூடிய சுய தணிக்கையுடனும் செயற்பட்டால் இந்தச் சமூக வலைத் தளங்கள் எதிர்காலத்தில் சமூகமாற்றத்தில் முக்கிய பங்காற்ற வாய்ப்புண்டு.

# விரல் கொடை!



**க**ர்ணன் மிகப் பெரிய கொடையாளி. அவன் இறந்த பிறகு சொர்க்கம் அடைந்தான். அங்கே அவனுக்குப் பசித்தது. ஆனால், சொர்க்கத்தை அடைந்துவிட்ட யாருக்கும் பசி என்பதே இருக்காது. இந்த உண்மையை அறிந்திருந்த கர்ணன், அங்கே வந்த ஒருவனிடம், “எனக்கு மட்டும் ஏன் பசிக்கிறது?” என்று கேட்டான். அதற்கு அவன், “நீ எல்லா தானமும் செய்தாய். ஆனால், அன்னதானம் செய்யவில்லை. அதனால் பசிக்கிறது” என்றான். பிறகு அவனே, “கர்ணா, உன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக் கொள்” என்றான். கர்ணன் அப்படியே செய்ய, பசி நின்று விட்டது!

சொர்க்கத்தான் விளக்கினான்:

“நீ பூமியில் வாழ்ந்தபோது ஒரு காரியம் செய்தாய், அஸ்தினாபுரத்துக்கு கண்ணன் தூது வந்தபோது, கண்ணனுடன் வந்த தேர்ப்பாகர்கள், “எங்களுக்கு உணவு ஏற்பாடுகள் எங்கே செய்யப்பட்டிருக்கின்றன?” என்று கேட்க, நீ உன் ஆள்காட்டி விரலால் “அதோ விதுரர் குடிசையில்” என்று சுட்டிக் காட்டினாய். பிறர் பசி போக்க ஆள்காட்டி விரலை நீட்டிய புண்ணியத்தால் இப்போது உன் விரலாலேயே உன் பசி தீர்ந்தது”.

ஆள்காட்டி விரல் தந்த அருட்கொடையை கர்ணனுக்கு நல்கிய நிகழ்வு, உள்ளத்தை நெகிழவைத்தது.

# பாதிப்பில் உருவான படங்கள்




### 64. Strangers on a Train (1951)

அந்நியர்கள் இருவர் ரயிலில் சந்தித்துப் பழக்கமாகிக் கொள்கிறார்கள். ஒருவன் மனைவி மீது வெறுப்புக் கொண்டிருப்பதை அறிந்து அவளைக் கொல்ல திட்டம் வகுத்துத் தருகிறான் மற்றவன். அதை வைத்து மிரட்டி தனக்குத் தேவையான கொலையையும் செய்ய நிர்ப்பந்திக்கிறான். இறுதியில் கொலையாளி பர்றிய முடிச்சவிழ்கிறது. அல்பிரட் ஹிட்ச்கொக் இயக்கத்தில் ஃபார்லி க்ராங்கர், றொபேட் வேக்கர், ரூத் ரோமன் ஆகியோர் நடித்த படம்.

**தமிழில் - ராஜன் மாதவ் இயக்கத்தில் சேரன், பிரசன்னா, ஹரிப்ரியா, நிகிதா ஆகியோர் நடித்து வெளிவந்த ‘முரண்’ (2011)**




### 65. Big (1988)

ஒரு எட்டு வயதுச் சிறுவன் தான் பெரியவர்களைப் போல இருந்தால் நல்லது என நினைக்கிறான். மாந்திரீக எந்திரத்தின் உதவியால் அவன் நினைத்தது பலித்துவிடுகிறது. அடுத்தநாள் காலையில் அவன் 28 வயது மனிதனுக்குரிய உடலும் மனது எட்டு வயதுச் சிறுவனாகவும் விழித்தெழுகிறான். றொம் ஹாங்ஸ், எலிசபெத் பெர்கின்ஸ், றொபேட் லோகியா ஆகியோர் நடித்தது.

**தமிழில் - எஸ்.ஜே.சூர்யா இயக்கி சிம்ரன், கிரண், தேவயானி ஆகியோருடன் நடித்து வெளிவந்த ‘நியூ’ (2004)**




### 66. The Classic (2003)

தான் காதலிக்கும் இளைஞனிடம் தன் உணர்வுகளை நேரில் சொல்ல கூச்சப்படும் ஒருத்தி, தன் நண்பன் ஜி-ஹே யிடம் அந்த இளைஞனுக்கு தனது பெயரில் இ-மெயில் அனுப்பும்படி வேண்டுகிறாள். அந்தக் கடிதங்களைப் படித்து அந்த இளைஞன் அவள் மேல் காதலாகிறான். இந்தக் காதல் கதை தனது அம்மாவின் காதல்கதையை ஒத்திருப்பதை ஜி-ஹே பின்னர் கண்டுபிடிக்கிறான். யி-ஜின் சொன், இன்-ஸியோங் ஜோ, வூ சோ ஆகியோர் நடித்தது.

**தமிழில் - ஆர்யா, ஸ்ரேயா, பிரீத்திகா, சந்தானம் நடிப்பில், மணிகண்டன் இயக்கி வெளிவந்த ‘சிக்கு புக்கு’ (2010)**

**மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு**

# பகிரங்க மடல்

**கௌரவ பணிப்பாளர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் பொறுப்புள்ள சட்டத்தரணி என்ற வகையிலும், பொறுப்புவாய்ந்த சில நிறுவனங்களின் சட்ட ஆலோசகர் என்ற வகையிலும், மக்களுடன் அதிக மாக பழகும் ஒருவன் என்ற வகையி லும் தங்களுக்கு யான் அனுப்பும் தாழ்மையான மடல்.

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் பலருடைய வாயிலும் முணு முணுக்கப்பட்ட ஒரு விடயத்தை தாங்கள் நன்கு அறிவீர்கள். வைத்தியர்களின் பணி அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிகின்ற வைத்தியர்களின் சேவைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. யுத்த காலத்திலும் சரி, மிகவும் ஆபத்தான காலங்களிலும் சரி, இயற்கை அனர்த்தங்களின் போதும் வைத்தியர்கள் செய்த பணியை யாழ்ப்பாண சமூகம் ஒருபோதும் மறந்துவிடவில்லை. கடவுளுக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு மனிதராலும் மதிக்கப்படுகின்ற வைத்தியர்களின் பணி வேதனத்திற்கு அப்பால் மனிதாபிமானமாகவும், சேவையாகவும் எமது மக்களுக்கு கிடைப்பது மகிழ்ச்சிக்குரியதே. பல்வேறு திணைக்களங்களில் பணி புரிந்தவர்கள் மிக மோசமான யுத்த சூழ்நிலையிலே கொழும்பிலும் வேறு வெளி இடங்களிலும் பணி புரிந்த காலங்களில் எமது வைத்தியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரவு பகலாக தங்கியிருந்து பணிபுரிந்தது நமது மக்களால் அவ் வளவு விரைவாய் மறந்துவிட முடி யாது. இருந்த போதிலும் அண் மைக்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலை யின் வாயிலில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் நோயாளரை பார் வையிட வருகின்ற மக்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகளும், கைகலப்புகளும் இடம்பெற்று வரு வதை என்னால் அவ தானிக்க கூடியதாக இருக்கிறது.

*யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை பார்வையிடு வது என்பது பல கருத்து அமைவுகளுக்கு அப்பால் "ஆறுதல் கொடுப்பது" என்ற மையப் பொருளுக்கு உள்ளே அடங்குகிறது. ஒருவரை ஆறுதல் படுத்துவது என்பது உலகிலே எந்தவொரு சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படவோ, தடைவிதிக்கப்படவோ இல்லை. இறந்து கொண்டிருக்கின்ற ஒரு நோயாளியை வெளியில் இருந்து வரும் ஒரு உறவு பார்ப்பதற்கும், அந்த கடைசி நேரத்திலாவது ஒரு உறவை சந்தித்துவிட்டுச் செல்லலாமே என்று வைத்தியசாலையில் இருப்பவர் ஆசைப்படுவதும் உலகில் எந்தவொரு இடத்திலும் தவறாக இருக்க முடியாது.*

உண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை பார்வையிடுவது என்பது பல கருத்து அமைவுகளுக்கு அப்பால் “ஆறுதல் கொடுப்பது” என்ற மையப் பொருளுக்கு உள்ளே அடங்குகிறது. ஒருவரை ஆறுதல் படுத்துவது என்பது உலகிலே எந்தவொரு சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படவோ, தடைவிதிக்கப்படவோ இல்லை. இறந்து கொண்டிருக்கின்ற ஒரு நோயாளியை வெளியில் இருந்து வரும் ஒரு உறவு பார்ப்பதற்கும், அந்த கடைசி நேரத்திலாவது ஒரு உறவை சந்தித்துவிட்டுச் செல்லலாமே என்று வைத்திய சாலையில் இருபபவர் ஆசைப்படுவதும் உலகில் எந்த வொரு இடத் திலும் தவறாக இருக்க முடியாது.

வைத்திய சாலைக்கு வரு பவர்கள் ஏதோ ஒரு வகையில் உயிருக்கு போரா டிக்கொண்டிருப்ப வரே அன்றி உல்லாசமாக தங்கியிருப்பவர் அல்ல. மேலும் யாழ் போதனா வைத்தியசாலையில் பொது மக்களால் ஒவ் வொரு வைத்தியரும், ஒவ் வொரு தாதியரும் ஏன் சகல வைத்தியசாலைப் பணியாளர்களும் எதிர்நோக்குகின்ற சகல அசௌகரியங் களையும் நான் நன்கு அறிவேன்.

மனித வாழ்க்கையில் பிரச்சினை களை சந்திக்காத மனிதன் என்று எவரும் இல்லை. பல்வேறுபட்ட இடங களில் இருந்து பல்வேறுபட்ட குணா அம்சங்களை உடைய மனிதர்கள் வந்துபோகின்ற ஒரே இடம் யாழ். போதனா வைத்தியசாலை மட்டுமே. தவிரவும் சேவ்வயை நோக்கமாகக் கொண்டு அதிக மருத்துவ வசதி வாய்ப்புக் களைக் கொண்டு இலவச மாக மக்களுக்கு பணி ஆற்றுகின்ற யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு அர சாங்க வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலை மட்டுமே.

எனவே சட்டவாளனாக மட்டுமன்றி ஒரு சாதாரண குடிமகனாகவும் என் னால் தாங்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை அவதானிக்க முடிகிறது. இருந்தபோதும் தங்கள் வைத்திய சாலையில் காணப்படுகின்ற அனுமதி அட்டை நடவடிக்கையானது பலரின் உள்ளங்களில் கிலேசத்தையும், மன வேதனையையும் ஏற்படுத்தியிருக் கிறது. தாங்கள் இரண்டு அனுமதி அட்டையை வழங்கியிருக்கிறீர்கள் அதில் ஒன்று ஏற்கனவே நோயாளி யுடன் நிற்கின்ற நபருக்குரியதாகவும், மற்றையது வெளியில் இருக்கும் நபர் உள்ளே வருவதற்காகவும் காணப் படுகிறது. யாழ்ப்பாண கலாசார பண் பாட்டிலே எமது பெண்கள் தனியாக ஒருபோதும் வைத்திய சாலைக்கு வருவதில்லை. தமது தந்தையாருடனோ, சகோதரனுடனோ அல்லது கணவரு டனோதான் அவர்கள் வருவார்கள்.

எனவே தான் மேற்படி அனுமதி அட்டையை நீங்கள் ஏன் மூன்றாக அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு மூன் றாக உயர்த்தும் சந்தர்ப்பத்தில் இனறு இந்த அனுமதி அட்டை தொடர் பாக ஏற்பட்ட பிரச்சினை குறைவதறகு வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றது. இது தொடர்பான பல்வேறுபட்ட சிக்கல்களை மேலும் நீங்கள் குறைத்துக்கொள்ள முடியும்.

நாம் வாழும் சமூகத்தில் ஒரு பிரச் சினை எனின் அதைத் தீர்ப்பதற்கு என்னால் ஒரு சில ஆலோசனையா வது முன்வைக்க வேண்டும் என்ற அவா முதன் முதலில் மேற்படி அனுமதி அட்டை தொடர்பில் செயற் படுத்த கிடைத்திருப்பது எனது பாக்கி யமே. எனவேதான் என்னுடைய சின்ன மனதில் ஏற்பட்ட இக்கருத்தை தங்க ளுக்கு தாழ்மையுடன் தெரிவிக்கின் றேன். தாங்கள் இதனை நடைமுறைப் படுத்துவீர்கள் என நம்புகிறேன்.

**ஜொனி மதுரநாயகம்**
**சட்டத்தரணி.**




# புதிர்ப் போட்டி 67

*புதிர்ப்போட்டி 67இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 10.12.2013*



**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

## சென்றவார விடைகள்




## அனுப்பவேண்டிய முகவரி

*புதிர்ப்போட்டி இல*
*தினமுரசு*
*இல. 373, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர்:- சி.தேனுஜான்
பாடசாலை :- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

பெயர்:- ம.யோதீஸ்வரன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- வி.நிலேக்கா
பாடசாலை :- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

பெயர்:- யோ.தனுசன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர் பபோட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள் கின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | | ■ | 4 |
| | ■ | ■ | | | ■ | ■ | |
| 6 | | ■ | 7 | | 8 | 9 | |
| ■ | | ■ | | | | | ■ |
| 11 | | 12 | ■ | ■ | 13 | | 14 |
| | ■ | | ■ | | ■ | 15 | |
| 16 | | | | | ■ | 17 | |
| | ■ | ■ | ■ | 18 | | | |

**இடமிருந்து வலம்**

1) பதங்கமாகக்கூடிய பொருள் ஒன்று
5) அம்மாவை செல்லமாக இப்படியம் அழைப்பார்கள்
6) இருபது அல்லது காலப்பருவத்தை இப்படியும் சொல்லலாம்
8) நாட்டின் முதல்வர்
11) விற்பூட்டும் கயிறு
12) உடம்பின் ஒரு பகுதி. அகலம் என்றும் பொருள்படும்.
14) திட்டம்
16) உபாயம்
18) அருந்ததி. நெல் மணி என்றும் பொருள்படும்.
19) ஐ.ந.ச மகாராஜா ஆட்சி புரிந்த நகர்.

**மேலிருந்து கீழ்**

1) கம்பம். கட்டுத்தறியையும் குறிக்கும்.
2) பூமாது
3) முகம்மதியர் விரதநாளாகக் கொண்டாடப் படும் மாதம்
4) பரதேசி.
7) சிவப்பு, ஒரு சுவை
9) உதயகாலம்
10) பொருட்களைச் சேமித்து வைக்கும் இடம்
12) ஆண்மக்கள்
13) உழுது காய்ந்த நிலம்
15) சீதை

## விண்ணப்பதாரரின் விபரம்

மானவர் முழுப்பெயர்:- ..........................................
பாடசாலையின் பெயர் :- ..........................................
தரம் :- ..........................................
தொலைபேசி இல :- ..........................................
முகவரி :- ..........................................

# வருடாந்த பரிசளிப்பு விழா



(மானிப்பாய்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி சிவகுமார் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவமனோகரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஜெயந்திரன், கௌரவ விருந்தினராக தினேஷ் வெதுப்பக உரிமையாளர் சிவலிங்கம் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் கல்வி, இணை பாட விதானச் செயற்பாடுகள், விளையாட்டு நிகழ்வுகளில் சாதனை படைத்த மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (48)

# முதியோர் இல்லத்தில் வாழ்ந்தவர் உறவினருடன் இணைந்தார்

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த பதினொரு வருடங்களாகத் தங்கியிருந்த கந்தையா தம்பிராசா எனும் 72 வயது முதியவர் கடநத புதன்கிழமை தனது உறவுகளுடன் இணைந்து கொண்டார்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் தனது உறவினர் ஒருவரின் பெயரையும், முகவரியையும் இல்ல உத்தியோகத்தர்களிடம் கூறி, அவர்களுடன் தங்கியிருப்பதற்கான தனது விருப்பத்தை இவர் தெரிவித்திருந்தார்.

அவரது ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக குறிப்பிட்ட உறவினர்களின் வீட்டிற்கு அவர் இல்ல உத்தியோகத்தர்களினால் கூட்டிச் செல்லப்பட்டார். ஆனால் அங்கிருந்தவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்ததி னால் மீண்டும் அவர் இல்லத்திற்கே திரும்ப வேண்டி ஏற்பட்டது.

எனினும், மற்றொரு உறவினரின் வீட்டிற்கு சென்று தங்குவதற்கு இந்த முதியவர் விரும்பினார். அதன் நிமித்தம் அவர் அவ்வீட்டிற்கு உத்தியோகத்தர்களால் கூட்டிச்செலலப்பட்டார்.

இவரது மருமகள் முறையான 60 வயது மதிக்கக்கூடிய பெண் ஒருவர் திருமண மாகாத நிலையில் தனது வயோதிபத் தந்தையாரை வைத்து பராமரித்துக் கொண்டிருந்தார்.

ஏழ்மை நிலையிலும் தனது மாமன் முறையான இம் முதியவரை ஏற்று அவரையும் தனது தந்தையுடன் சேர்த்து ஆதரிப்பதற்கு இவர் சம்மதம் தெரிவித்தார். அந்த வயோதிபப் பெண்ணினால் இவரை வைத்து பராமரிக்க முடியாமல் போனால் தமமுடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல உத்தியோகத்தர்கள் குறிதத வயோதிபப் பெண்ணிடம் தெரிவித்துச் சென்றனர். (137)

# சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆறுமுகநாவலர் குருபூசைதினம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும், வினாவிடைப் போட்டிப் பரீட்சை பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக் குருபூசை நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையைத் தொடர்ந்து அகில இலங்கை திருமுறை மன்றத்தினரது கூட்டுப் பிரார்த்தனையும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிப் பரீட்சை பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

நயினை சி.சோமேஸ்வரப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவிற்கு கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் சைவப் புலவர் பா.காசிநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு வினாவிடைப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்குவார்.

# விநாயகர் சனசமூக நிலையத்தின் அற்புதப் பொன்மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் அற்புதப் பொன்மலர் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் நிலையத் தலைவர் மகேந்திரன் சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக தொழிலதிபர் லயன் இ.எஸ்.பி. நாகரத்தினம் யாழ் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் [illegible] ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராசா, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் க.தேவராசா, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், சொலலின் செல்வர் இரா.செல்வவடிவேல், இளைப்பாறிய உதவிக கல்விப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ந.சர்வானந்தா, யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியர் க.முருகதாஸன், தேசமானி லயன் இ.பாலசுந்தரம், இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.கந்தசாமி, நிலைய முன்னாள் தலைவர் ப.செ.இராசரட்ணம் ஆகியோா கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நர்த்தன விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கதிர்காமநாதக் குருக்கள், ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.ரமணிதரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# வாரம் ஒரு காரம்

## எம்மை நாமே ஏமாற்றி விட்டோம்

இன்று பெரும்பாலான தமிழ் மக்கள் மத்தியில் குற்ற உள்ளுணர்வாக குமுறுகின்ற வார்த்தை 'எம்மை நாமே ஏமாற்றி விட்டோமோ!...' என்பது தான் இது ஒலிவழுவில் வெளிவரா விட்டாலும் அழமனங்களில் அலை மோதும் ஆதங்கமிது.

அன்று தொட்டு இன்றுவரை தெரிந்தும் சில தவறுகளைத் தெரிவில் செய்துவருகின்றோம். காரணம் கண்ணை மறைக்கும் அரச எதிர்ப்பின் ஆக்ரோசமே!... இதனால் அரசோடு சார்ந்து அங்கீகாரங்களை பெற்றுக் கொடுப்போரும் எதிரிகளாகத் தெரிகின்றனர்.

துன்பங்களை விளைவித்தோர் தூற்றுதலிற்கு உட்படுவது இயற்கை. அவ்வாறாயின் தமிழ் மக்களின் துன்பங்களிற்கெல்லம் யார் காரணமென சிந்தித்தோமானால் எதிரி என்பவர்களிற்கப்பால் துரோகிகளே மலிந்திருக்கின்றனர். இந்தத் துரோகிகளை எமது பிரதிநிதிகளாக அரங்கேற்றி எதிரியை வலுப்படுத்தி அவ் எதிரியிடம் தீர்வுக்கான வரங்கேட்கின்றோம்.

அது கிடைக்குமா? இதுவே இதுவரை எமது அரசியல் பயணம் தோற்றுப்போனமைக்கு அடிப்படைக்காரணம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு இன்றுவரை சிறுபான்மைத் தமிழினம் இலங்கையில் நசுக்கப்படுகின்றது எனும் சாரத்தைப் பயன்படுத்தி பலர் அரசியல் நடாத்தி சுகபோக வாழ்க்கை வாழ்ந்து முடித்து விட்டார்கள். காலத்திற்குக்காலம் மாறிவரும் அரசியல்களால் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்தவர்கள் எமது மக்கள்தான்.

ஆயுத வழிப்போராட்டம் என்கின்ற பெயரில் எத்தனை உயிர்கள் பறி போயின. எத்தனை உயிர்கள் ஊனமாக்கப்பட்டன.. இதிலும் ஏமாற்றங்களைத் தவிர இறுதியில் எதுவும் மிஞ்சவில்லை.

இதில் மிக வேதனையான விடயம் என்னவெனில் இதுவரை காலம் நடந்த அரசியலில் எம்மவர்களால் எமது மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். தற்போது நடக்கும் அரசியலில் தாங்களாகவே தாங்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். நடந்து முடிந்த மாகாண சபை வெற்றியின் பின்னர் தமிழினத்திற்கு ஓர் தீர்வுவரும் விடிவுவரும் என்கின்ற கனவுகள் எல்லாம் பகற்கனவாகி பலிக்காது நகர்ந்து கொண்டு இருக்கின்றது.

அன்று காணாமற்போன தமது உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறு மக்கள் கதறியபோதும் காரைவிட்டு இறங்காது கமரூனை அழைத்துச் செல்ல விரைந்தார் எங்கள் சம்பந்தரைய்யா. வலிவடக்கு மக்கள் துன்பத்தைக் கூட கொண்டு சென்று காட்டாது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று கட்டடம் காட்டி காசு சம்பாதித்தார் எங்கள் சரவணபவனய்யா.

வந்தவர்கள் வலிவடக்கிற்குச் செல்லவில்லை அவர்களை வழிமாற்றியவர்கள் மக்கள் தெரிவில் மகிமை பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர். இது ஒருபுறமிருக்க வடமாகாணசபை முதலமைச்சர் வலிவடக்கிற்கு சென்று இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க எனக்கு எந்த அதிகாரங்களும் தரப்படவில்லையென்றாராம். துன்பப்படும் வடக்கு மக்களிற்கு வடமாகாணசபை முதலமைச்சர் சொல்லும் பதில் இதுவா? அப்படியானால் அந்த அதிகாரமற்ற கதிரையில் எதற்காக அமர்ந்திருக்கின்றார்?

இதுதான் தற்போது எங்கள் தலைவர்களிடம் இருக்கும் அரசியல் கொள்கை, அந்தஸ்துக்கு கதிரை வேண்டும். அதற்கான அங்கீகாரத்துக்கு அரச எதிர்ப்புப்பேச்சு வேண்டும். திரைமறைவில் அரசோடு இணக்கப்பாடு வேண்டும். தெரிவு செய்த மக்கள் தெருவோடு அலையவேண்டும்...

இவையெல்லாம் யாருடைய தப்பு என ஒருதடவை ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். முடிவு சுத்திச்சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள் நிற்கும். அனுபவம் மறந்த அரசியல் தெரிவுகள் எம்மால் இடம்பெறுவதே இதற்கெல்லாம் மூலகாரணம்.

அன்று விடுதலைப்புலிகளுடன் இருந்து எதற்கும் தலையாட்டி அப்பாவிப் பிள்ளைகளைப் பலிகொடுத்தவர்களை அரங்கேற்றி வைத்திருப்பது யாருடைய தப்பு?


அன்று அரசியல் நடத்த புலிகள் வேண்டும். இன்று அவர்களிற்கு அரசியல் நடத்த மகிந்த வேண்டும். தேர்தலில் வெற்றி பெற மக்கள் வேண்டும். இதற்குப் பேசுபொருளாக மறத்தமிழர் என மார்புதட்ட வேண்டும். இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாத மக்களும் தொடர்ந்து ஏமாற்றங்களை சந்தித்தே ஆக வேண்டும்.

ஐங்கரநேசன் அரசியலிற்குள் வரும் போது நேசனை பலர் நேசித்தார்கள். வேறு துருவத்தில் பார்த்தார்கள். ஆனால் இன்று அரசியல் வாடை அவருக்கும் வீச ஆரம்பித்துவிட்டது. மின்சார சபையின் அழைப்பின் பெயரில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஐங்கரநேசன் ஜனாதிபதியின் பிறந்த நாளிற்கு மரம் நாட்டி இருக்கின்றார். அத்துடன் நல்லெண்ண சமிக்ஞையை நாங்கள் வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் என்றாராம். அதே வேளை அரசியலிற்காக அவ்வப்போது இனவாத கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றார்.

இப்படிப்பட்ட அரசியல்வாதிகளை அரங்கேற்றியது யாருடைய தப்பு என்பதுதான் இங்கு கேள்வி. விடைகிடைக்குமா? அல்லது மீண்டும் இத்தவறுகள் தொடருமா என்பதைப் பொறுத்தே தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

– வெண்கட்டியன்

# எழுவைதீவு இறங்குதுறையை புனரமைக்குமாறு கோரிக்கை





(தீவகம்)

எழுவைதீவு இறங்குதுறையை புனரமைக்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீவக மக்கள் சார்பாக ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கோரிக்கை விடுத்துள்ளார்.

எழுவைதீவு இறங்குதுறை மிக மோசமாக பாதிப்படைந்த நிலையில் அத்தீவிற்கான பிரயாணத்தினை மேற்கொள்ள முடியாத நிலையில் குறித்த தீவு மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

எனவே மேற்படி இறங்குதுறையினை விரைவில் புனரமைக்குமாறு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட இணைத்தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இறங்குதுறையினை நேரில் சென்று பார்வையிட்டு புனரமைப்பு பணிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும் எழுவைதீவில் வாரம் ஒரு பகலில் மட்டுமே வைத்தியர் சென்று சிகிச்சையளிப்பதனால் மற்றைய தினங்களில் மக்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் துன்பங்களினை எதிர்கொள்வதனாலும் அங்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை மிக விரைவில் நியமிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து தீவகத்திற்கான பிரதான வீதியாக விளங்கும் வேலணை குறிகாட்டுவான் வீதி பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் வீதியால் பயணத்தினை மேற்கொள்ள முடியாது மக்கள் பல்வேறு சிரமங்களின்ன எதிர்நோக்கி வருவதாக சுட்டிக் காட்டினார்.

மேலும் கரவெட்டி பிரதேசத்தில் வீதி புனரமைப்பு பணிகளின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உடைக்கப்பட்ட பஸ் நிலையம் ஒருவருட காலமாகியும் மீள் கட்டுமானத்தினை மேற்கொள்ளாததனால் மக்கள் பஸ் தரிப்பு நிலையம் இன்றி வீதியோரத்தில் நிற்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இம்மாவட்ட மக்கள் கடந்த யுத்தத்தினால் பல்வேறான இழப்புக்களை எதிர்நோக்கிய நிலையில் தமது வாழ்க்கையினை பெரும் சவாலாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர் எனவே இவர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி உதவித்திட்டங்களினை அதிகரிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெறுபேறு விரைவில்

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை குறித்த திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான அவசியமான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 10 ஆயிரம் மதிப்பீட்டாளர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 92 ஆயிரத்து 704 பரீட்சார்த்திகள் தோற்றினர். இவர்களில் 2 இலட்சத்து 35 ஆயிரத்து 318 பரீட்சார்த்திகள் பாடசாலைகளிலிருந்து தோற்றியதுடன், 45 ஆயிரத்து 240 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியாகத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. *

# சாயி பாபாவின் பிறந்த நாள் நிகழ்வு

(மானிப்பாய்)

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 87ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் மானிப்பாய் சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விசேட பஜனையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மாணவர்களிற்கான அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளன. பக்தர்களுக்கு தெய்வீக பிரசாதமும் வழங்கப்படவுள்ளதாக மானிப்பாய் சத்திய சாயி சேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (48)

# வாக்குச் சொல்லி வந்த பெண் முதியோர் இல்லம் வந்தார்

(அராலி)

அராலிப் பகுதியில் உள்ள அம்மன் கோவில் ஒன்றில் அடியவர்களுக்கு வாக்குச் சொல்லி வந்த 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் நேற்றுமுன்தினம் கைதடி முதியோர் இல்லத்துக்கு வந்தார்.

தான் கடந்த 41 வருடங்களாக வாக்குச் சொல்லி வருவதாகவும், பெரும்பாலும் அம்மன் கோவிலில் இருந்தே இதனைச் செய்து வந்த தாகவும், தற்போது தான் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதால் தனக்குத் தங்குவதற்கு இடம் தந்து தவுமாறு இல்ல அத்தியட்சகரிடம் கேட்டுக் கொண்டார்.

அராலியில் தனக்கு மூன்று பரப்புக்காணியில் சிறிய குடிசை ஒன்றும் இருப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

இம் முதிய பெண்மணிக்கு. இரண்டு பிள்ளைகள் திருமணமாகி குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பிள்ளைகளுடன் இணைந்து வாழ விருப்பமின்மையால் அவர்களுடன் தங்காமல் வெளியேறியதாக இவர் தெரிவித்துள்ளார்.

இவரை இல்லத்தில் இணைத்துக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டதால் இவருக்கான உரிய வழி காட்டல்களை அத்தியட்சகர் இவரிடம் கூறி அனுப்பியுள்ளார். (137)

## அதிபர்கள் கவனத்திற்கு

யாழ்.வலயத்தின் சகல பாடசாலை அதிபர்களும், பாடசாலைச் சமூகத்தை ஒன்றிணைத்து நவம்பர் 29ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 5ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் டெங்குநோயின் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார்.

# 5ஆவது இலவச கல்விக் கருத்தரங்கு

நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 5ஆவது கருத்தரங்கு மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் யோகரத்தினமும் கௌரவ விருந்தினர்களாக மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.ஈஸ்வரன், நல்லூர் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி யுகராஜ், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.நவசக்தி, இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம், மாதகல் நுணசை மகா வித்தியாலயம், சில்லாலை றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.(48)

# யாழ்.எயிட் நிறுவனத்தால் உதவிப் பொருட்கள் வழங்கல்



(மானிப்பாய்)

தமிழர் தாயகப் பிரதேசங்களில் யாழ். எயிட் மேற்கொண்டு வரும் நலிவுற்ற மாணவர்களின் கல்விக்கான உதவித்திட்டத்தின் கீழ் நளின் தகவல் தொழில்நுட்ப நிறுவன அனுசரணையில் ஆனையிறவு தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறான உதவிப் பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. பாடசாலை முதல்வர் கே. கருணாநந்தன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக நளின் கணனி தொழில்நுட்ப நிறுவன உரிமையாளர் மு.சஞ்சீவன் மற்றும் கிளிநொச்சி கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.சிறிகுமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்து உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர். (48)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பல்லவராயன்கட்டு பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**முன்பள்ளி சிறுவர்களுக்கான கதை சொல்லும் போட்டி,**

ச.சாளினி, (முழங்காவில் கலை மகள் முன்பள்ளி), சு.கயல்விழி, (ஜெயபுரம் அன்னை திரேசா முன்பள்ளி), பி.பிப்சிகா, (கிராஞ்சி ஐக்கியம் முன்பள்ளி).

**ஆரம்பப் பிரிவு - தரம், 01 - 02, திருக்குறள்.**

க.தமிழினி, (கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க.பாடசாலை), அ.றொறிங்டன், (கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயம்), ம.மதுஷா, (கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை).

**ஆரம்பப் பிரிவு - தரம் 01 - 02, கொன்றை வேந்தன்.**

ச.சங்கீர்த்தனன், (கிளி/கரியா லைநாகபடுவான் அ.த.க.பாடசாலை), கே.எப்சிபா, (ஜெயபுரம் ம.வி), சீ.தமிழழகன், (கிளி/முழங்காவில் ஆரம்பப் பாடசாலை).

**ஆரம்பப் பிரிவு - தரம் 01 - 02, ஆத்திசூடி.**

ச.டிதுர்சன், (கிளி/முழங் காவில் ஆரம்பப் பாடசாலை), ம.இசைப்பிரியா, (கிளி/கரியா லைநாகபடுவான் அ.த.க.பாட சாலை), ப.கயானந்த வதனி, (கிளி/வேரவில் இந்து மகாவித் தியாலயம்).

(112), (தொடரும்)

# தரம் - 10 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

## வர்த்தகம்

பகுதி - I - II
2 மணி

ஆசிரியர்:-
எஸ். சசிகரன்

01. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்குரிய காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 30,000.00 சாதக மீதி ஒன்றினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று மீதி வேறு ஓர் மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ வசூலிக்கப்படாத காசோலை ரூபா 6,000.00
➢ கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 3,000.00
➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ நேரடி வைப்பு ரூபா 2,500.00
❖ வங்கிக் கட்டணம் ரூபா 550.00
❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,500.00

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

02. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்குரிய காசேட்டு வங்கி மீதி ரூபா 20,000.00 மீதி ஒன்றினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று மீதி வேறு ஒரு மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,850.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 650.00
❖ காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 150.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 1,500.00
❖ நேரடி மாற்றல் ரூபா 1,250.00

➢ வைப்புச் செய்யப்பட்ட ரூபா 6,500.00 பெறுமதியான காசோலை பெப்ரவரி மாதம் வங்கியால் செலவு வைக்கப்பட்டது.
➢ வரையப்பட்ட ரூபா 4,500.00 பெறுமதியான காசோலை பெப்ரவரி மாதம் வங்கியால் வரவு வைக்கப்பட்டது.

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

03. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்குரிய காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 15,000.00 பாதக மீதி ஒன்றினைக் காட்டியது. இது வங்கிக் கூற்று மீதியில் இருந்து வேறுபட்டு இருந்தது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-
➢ வைப்புச் செய்யப்பட்ட ரூபா 6,000.00 பெறுமதியான காசோலை வங்கியினால் இன்னமும் செலவு வைக்கப்படவில்லை.
➢ வரையப்பட்டரூபா 4,500.00 பெறுமதியான காசோலை வங்கியால் இன்னமும் வரவு வைக்கப்படவில்லை.
➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி வசூலித்த வட்டி ரூபா 2,200.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 1,250.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 980.00
❖ நேரடி மாற்றல் ரூபா 2,750.00

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

04. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்கு காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 18,750.00 செலவு மீதி ஒன்றினைக் காட்டியது. இது வங்கிக் கூற்று மீதியில் இருந்து வேறுபட்டு இருந்தது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ வைப்புச் செய்யப்பட்ட ரூபா 8,000.00 பெறுமதியான காசோலைகளில் ரூபா 2,500.00 பெறுமதியான காசோலைகள் மாத்திரமேயே ஜனவரி மாதம் வங்கியால் செலவு வைக்கப்பட்டது.
➢ வரையப்பட்ட ரூபா 6,000.00 பெறுமதியான காசோலைகளில் ரூபா 3,800.00 பெறுமதியான காசோலைகள் மாத்திரமேயே ஜனவரி மாதம் வங்கியால் வரவு வைக்கப்பட்டது.
➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 750.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 3,000.00
❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,500.00
❖ நேரடி வைப்பு ரூபா 2,600.00

➢ வரையப்பட்ட ரூபா 2,000.00 பெறுமதியான காசோலையானது வங்கியால் ரூபா 200.00 எனப் பதியப்பட்டது.

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

05. முருகன் நிறுவனத்தின் 31.01.2011 இல் காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 20,000.00 இனை சாதகமானதாகக் காட்டியது. அத் திகதியில் வங்கிக் கூற்று ரூபா 31,500.00 இனை சாதகமானதாகக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ மாற்றப்படாத காசோலை ரூபா 22,000.00
➢ வசூலிக்கப்படாத காசோலை ரூபா 16,000.00
➢ பின்வரும் விடயங்கள் வங்கிக் கூற்றில் காணப்பட்ட போதும் காசேட்டில் பதியப்படவில்லை.

❖ நேரடி வைப்பு வேலன் ரூபா 6,000.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 550.00
❖ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய காப்புறுதி ரூபா 1,200.00
❖ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,250.00

வேண்டப்படுவது:-

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

06. முருகன் நிறுவனத்தின் காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 30,000.00 ஆகக் காணப்பட்டது. அத் திகதியில் வங்கிக் கூற்று மீதி ரூபா 38,200.00 ஆகக் காணப்பட்டது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ மாற்றப்படாத காசோலை ரூபா 15,500.00
➢ வசூலிக்கப்படாத காசோலை ரூபா 12,250.00
➢ பின்வரும் விடயங்கள் காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

❖ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி வசூலித்த வட்டி ரூபா 3,250.00
❖ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய வாடகை ரூபா 1,200.00
❖ நேரடி வைப்பு வேலன் ரூபா 4,200.00
❖ வங்கிக் கட்டணம் ரூபா 1,300.00

வேண்டப்படுவது:-

**வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

07. முருகன் என்பவரின் காசேட்டின் படி வங்கி மீதி 31.01.2011 இல் ரூபா 14,500.00 காட்டியது. வங்கிக் கூற்று மீதி வேறு ஓர் மீதியைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-
➢ வைப்புச் செய்யப்பட்ட பின்வரும் காசோலைகள் வங்கிக் கூற்றில் செலவு வைக்கப்படவில்லை.

❖ AB0051 ரூபா 1,500.00
❖ AC101 ரூபா 2,250.00
❖ BD1001 ரூபா 6,500.00

➢ வரையப்பட்ட பின்வரும் காசோலைகள் வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்படவில்லை.

❖ ABB0055 ரூபா 3,500.00
❖ ABB0065 ரூபா 780.00
❖ ABB0092 ரூபா 6,000.00

➢ பின்வருவன காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
❖ வங்கிக் கட்டணம் ரூபா 350.00
❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,500.00
❖ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய சந்தா ரூபா 325.00
❖ நேரடி வைப்பு வேலன் ரூபா 1,600.00

➢ வைப்பில் இட்ட ரூபா 3,400.00 பெறுமதியான காசோலை காசேட்டு வங்கி நிரலில் ரூபா 4,300.00 என வரவு வைக்கப்பட்டது.

வேண்டப்படுவது:-

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

08. முருகன் என்பவருக்கு 2011 ஜனவரி மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று கிடைத்தது. அத் திகதியில் காசேட்டின் படி அவரது நடைமுறைக் கணக்கு நிலுவை ரூபா 18,900.00 ஆக இருந்தது. எனினும் வங்கிக் கூற்று நிலுவை வித்தியாசமாக இருந்தது.

**வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-**

➢ வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 62131 இலக்கமுடைய ரூபா 5,850.00 ஆன காசோலை ஒன்று வங்கியால் வசூலிக்கப்படவில்லை.
➢ ரூபா 1,500.00 இற்குரிய நிலையான காப்புறுதிக் கட்டளை காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
➢ வங்கிக் கட்டணம் ரூபா 150.00, காசோலைப் புத்தகக் கட்ட்ணம் ரூபா 350.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
➢ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 5,500.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
➢ ரூபா 8,250.00 இற்கு வரைந்து கொடுக்கப்பட்ட 4321 இலக்க காசோலை வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்படவில்லை.
➢ காசேட்டு வங்கி நிரலின் வரவுப் பக்கம் ரூபா 2,000.00 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

09. முருகனின் காசேட்டின் படி வங்கி மீதி 2011 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ரூபா 3,000.00 ஆக இருந்தது. வங்கிக் கூற்றின் படி வங்கி மீதியானது ரூபா 2,092.00 ஆக இருந்தது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

➢ காசேட்டின் வரவுப் பக்கம் ரூபா 200.00 இனால் மேலதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.
➢ காசேட்டில் வரவு வைக்கப்பட்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட ரூபா 950.00 இற்கான காசோலைகள் இன்னமும் அவரது கணக்கில் செலவு

வைக்கப்படவில்லை.

- காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 81.00 காசேட்டில் ரூபா 18.00 என பதியப்பட்டிருந்தது.
- வேலன் எனும் வாடிக்கையாளர் ஒருவர் ரூபா 850.00 இனை முருகனின் கணக்கிற்கு நேரடியாக செலுத்தி இருந்தார். இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
- முருகனின் பணிப்பின் பெயரில் வங்கியானது பின்வரும் கொடுப்பனவுகளை செய்திருந்தது.

❖ வருமான வரி ரூபா 220.00
❖ ஆயுட் காப்புறுதி ரூபா 325.00

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

10. பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முருகன் என்ற வியாபாரியின் 2011.01.31 இல் இருந்தவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்க.

- காசேட்டின் படி 2011.01.31 இல் வங்கி மேலதிகப் பற்று ரூபா 16,000.00
- ஜனவரி 2011 இல் சென்மதியாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 3,200.00,ரூபா 6,450.00,ரூபா 2,225.00,ரூபா 340.00 எனும் தொகைகளுக்குரிய காசோலைகள் வங்கிக் கூற்றில் இடம்பெற்றிருக்கவில்லை.
- ஜனவரி 2011 இல் பெறப்பட்ட ரூபா 6,500.00 பெறுமதியான காசோலை ஒன்று காசேட்டின் வங்கி நிரலின் வரவுப் பக்கத்தில் இடம்பெற்றபோதும் அது வங்கிக் கூற்றில் இடம்பெற்றிருக்கவில்லை.
- வங்கிக் கட்டணம் ரூபா 15.00, வங்கி வட்டி ரூபா 3,450.00 என்பன காசேட்டில் இடம்பெறவில்லை.
- முருகன் வியாபாரத்தின் பெயரில் வங்கியால் சேகரிக்கப்பட்ட ரூபா 12,500.00 பங்குலாபம் காசேட்டில் இடம்பெறவில்லை.
- ஜனவரி 25 இல் வைப்பிலிடப்பட்டு வங்கிக் கூற்றில் தோன்றுகின்ற ரூபா 125.00 பெறுமதியான காசோலை காசேட்டில் இடம்பெறவில்லை.
- ஜனவரி 27 இல் வங்கியில் இடப்பட்ட ரூபா 3,250.00,ரூபா 1,250.00,ரூபா 350.00 பெறுமதியான காசோலைகள் பெப்ரவரி மாத வங்கிக் கூற்றிலேயே இடம்பெற்றிருந்தன.

11. தனி வியாபாரியான முருகன் தயாரித்த காசேட்டு வங்கி மீதி 31.01.2011 இல் ரூபா 18,000.00 பாதகமான மீதியினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று வேறு ஓர் மீதியினைக் காட்டியது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- மாற்றப்படாத காசோலை ரூபா 2,150.00
- வசூலிக்கப்படாத காசோலை ரூபா 1,100.00
- வாடிக்கையாளரான கந்தனின் நேரடி வைப்பு ரூபா 3,250.00
- வங்கி அறவிட்ட கூலி ரூபா 375.00, காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 15 0.00 என்பன காசேட்டில் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

12. முருகன் என்பவருக்கு 31.01.2011 இல் கிடைத்த வங்கிக் கூற்று ரூபா 22,000.00 சாதகமான மீதியைக் காட்டிய போதிலும் அவரது காசேட்டின் படி வங்கி மீதி வேறு ஒரு மீதியைக் காட்டியது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 20151 இலக்க ரூபா 7,500.00 பெறுமதியான காசோலை ஒன்று வங்கியால் வசூலிக்கப்படவில்லை.
- ரூபா 1,400.00 இற்குரிய நிலையான காப்புறுதிக் கட்டளை காசேட்டில் பதியப்படவில்லை.
- வங்கிக் கட்டணம் ரூபா 375.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
- வரைந்து கொடுக்கப்பட்ட 5022 இலக்க ரூபா 8,000.00 பெறுமதியான காசோலை வங்கிக் கூற்றில் இடம்பெறவில்லை.
- காசேட்டு வங்கி நிரலின் வரவுப் பக்கம் ரூபா 500.00 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

13. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி ரூபா 16,000.00 சாதக மீதி ஒன்றினைக் காட்டியது. இது காசேட்டின் படி வங்கி மீதியில் இருந்து வேறுபட்டு இருந்தது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- வசூலிக்கப்படாத காசோலை ரூபா 4,500.00
- வரையப்பட்டு கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 3,750.00
- பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,800.00
❖ வங்கி அறவிட்ட வட்டி ரூபா 1,250.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 2,500.00
❖ நேரடி மாற்றல் ரூபா 1,500.00

**வேண்டப்படுவது:-**

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

14. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி ரூபா 15,000.00 செலவு மீதி ஒன்றினைக் காட்டியது. இது காசேட்டின் படி வங்கி மீதியில் இருந்து வேறுபட்டிருந்தது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி வசூலித்த வட்டி ரூபா 1,280.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 575.00
❖ நேரடி வைப்பு ரூபா 4,375.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 1,650.00

- வசூலிக்கப்படாத காசோலை ரூபா 5,250.00
- மாற்றப்படாத காசோலை ரூபா 3,350.00

**வேண்டப்படுவது:-**

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

15. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்குரிய வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி ரூபா 13,750.00 பாதக மீதி ஒன்றினைக் காட்டியது. காசேட்டின் படி வங்கி மீதி வேறு ஓர் மீதியினைக் காட்டியது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- தேறாத காசோலை ரூபா 6,500.00
- சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 5,400.00
- பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 2,250.00
❖ நேரடி வைப்பு ரூபா 1,350.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 540.00
❖ காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 300.00
❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 1,645.00

வேண்டப்படுவது:-

**2011 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

16. முருகன் நிறுவன வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி 31.01.2011 இல் ரூபா 1,150.00 ஆக இருந்தது. ஆனால் நிறுவனத்தின் காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 1,764.00 ஆக இருந்தது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- காசேட்டின் வரவுப் பக்கம் ரூபா 175.00 இனால் குறைத்து எழுதப்பட்டிருந்தது.
- காசேட்டில் வரவு வைக்கப்பட்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட ரூபா 750.00 இற்கான காசோலை இன்னமும் அவரது கணக்கில் செலவு வைக்கப்படவில்லை.
- நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய வருமான வரி ரூபா 180.00, காப்புறுதிக் கட்டணம் ரூபா 95.00 என்பன காசேட்டில் இடம்பெறவில்லை.
- வேலன் எனும் வாடிக்கையாளர் ஒருவர் ரூபா 200.00 இனை முருகனின் கணக்கிற்கு நேரடியாக செலுத்தி இருந்தார். இது காசேட்டில் இடம்பெறவில்லை.
- காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 15.00 ஆனது காசேட்டில் ரூபா 51.00 என பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

17. 31.01.2011 இல் முடிவுற்ற மாதத்திற்கான முருகன் என்பவரின் நிறுவனத்திற்கு வங்கி அனுப்பிய வங்கிக் கூற்று ரூபா 27,960.00 ஐச் சாதகமான மீதியாகக் காட்டியது. ஆனால் நிறுவனத்தின் காசேடு வேறு ஓர் மீதியினைக் காட்டியது.

**வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-**

- காசேட்டின் செலவுப் பக்கம்ரூபா 1,500.00 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.
- 25.01.2011 இல் எழுதிக் கொடுக்கப்பட்ட ரூபா 11,500.00 பெறுமதியான காசோலைகள் 06.02.2011 இலேயே வங்கியால் வரவு வைக்கப்பட்டிருந்தது.
- 29.01.2011 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 12,500.00 பெறுமதியான காசோலைகள் 04.02.2011 இலேயே வங்கியால் வங்கிக் கூற்றில் சேர்க்கப்பட்டது.
- நிலையான கட்டளையின் பெயரில் வங்கி வசூலித்த முதலீட்டு வருமானம் ரூபா 2,500.00, செலுத்திய வாடகை ரூபா 1,500.00 என்பன காசேட்டில் இடம்பெறவில்லை.
- வங்கி அறவிட்ட வங்கிக் கூலி ரூபா 375.00 காசேட்டில் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது:-

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

18. முருகன் நிறுவனத்திற்கு கிடைத்த வங்கிக் கூற்று ஆனது 31.01.2011 இல் ரூபா 13,500.00 சாதகமான மீதியாகக் காட்டியது. ஆனால் அது காசேட்டு மீதியில் இருந்து வேறுபட்டிருந்தது.

**வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-**

- வேலனிடம் பெற்று 25.01.2011 இல் வைப்பில் இட்ட ரூபா 4,250.00 பெறுமதியான காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது. இது பற்றிய பதிவு காசேட்டில் இடம்பெறவில்லை.
- கடன்கொடுத்தோரான கந்தன் என்பவருக்கு ரூபா 2,500.00 பெறுமதிக்கு வழங்கப்பட்ட ஒரு காசோலை வங்கியில் மாற்றப்படவில்லை.
- கடன்பட்டோரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 6,000.00 பெறுமதியான காசோலை வங்கியால் வசூலிக்கப்படவில்லை.
- பின்வரும் விடயங்களை வங்கிக் கூற்று காட்டியது.

❖ ரூபா 1,000,000.00 கடனுக்கு வங்கி அறவிட்ட வட்டி ரூபா 5,000.00
❖ முதலீட்டின் மீது வங்கி வசூலித்த வருமானம் ரூபா 2,250.00
❖ வங்கி அறவிட்ட வங்கிக் கூலி ரூபா 600.00
❖ வங்கி அறவிட்ட காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 900.00

வேண்டப்படுவது:-

**31.01.2011 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

# இலகு கடன் அடிப்படையிலேயே அபிவிருத்திக்கு நிதி கிடைக்கிறது





அபிவிருத்தித் திட்டங்களின் 92 வீதமான நிதி உலக நாடுகளிடமிருந்து மீளச்செலுத்தும் இலகுகடன் அடிப்படையிலேயே பெறப்படுகின்றது. ஏனைய எட்டு வீதமான நிதி மட்டுமே நன்கொடையாகக் கிடைக்கின்றது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மருதநகர மேற்கு பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லினை அண்மையில் நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்தின் பின்னர் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மயான பூமியாக காட்சியளித்த நிலங்களிலேயே மக்கள் மீள்குடியேறினர் ஆனால் இன்று பாரிய முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் வாழ்நிலைகளில் முன்னேற்றங்களும் மனங்களில் மகிழ்சியும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமையை பயன்படுத்தி தொடர்ந்தும் முன்னேற்றங்களை நோக்கி பயணிக்க வேண்டும். மாறாக எமது தலைமுறையினர் அனுபவித்த துயரச் சூழலையே இளம் தலைமுறையினருக்கும் வழங்கமுடியாது அவ்வாறான செயற்பாடுகளுக்கு நாமும் துணைநிற்க முடியாது. அதனடிப்படையிலேயே நாம் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றத்தை நோக்கி சிந்தித்தோம் அதற்கமைவாக மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளோம் என்றார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் இரத்தம் சிந்தியும் யுத்தங்களை புரிந்தும் மேற்கொள்ளமுடியாத சிலகாரியங்களை அறிவுசார் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகளினூடாக சாதிக்க முடியும். அறிவார்ந்த அரசியல் வழிமுறைகளூடாக எமது இலக்குகளைநாம் எட்ட முடியும் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக மருதநகர் மேற்கு பிரதேசத்தின் மீள்குடியேற்றம் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார். யு.என்.ஹபிடாட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுமார் 25 இலட்சம்ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள பொது நோக்கு மண்டபத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் அடிக்கல் லினை நாட்டி வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் கிருஸ்ணசாமி கரைச்சி பிரசேசெயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் அமலராஜ் .யு.என்.ஹ பிடாட் நிறுவனத்தின் பொறியியலாளர் யுவதீபன கிராம சேவையாளர் இந்திரன் ஆகி கோரும் கிராம மட்ட அமைப்புக் களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# போலி நாணயத்தாள் வைப்பிலிடச் சென்றவர் கைது

பேலியகொட பகுதியில் உள்ள வங்கியொன்றில் போலி நாணயத்தாள் வைப்பிலிடச் சென்ற சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். வங்கிக்கு சென்ற நபர் 2000 ரூபா பணத்தை வைப்பிலிட்டுள்ளார். அவர் வழங்கிய 2000 ரூபா போலி என கண்டுகொண்ட வங்கி முகாமையாளர் குறித்த நபரை பணத்துடன் பேலிய கொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ளவர் களனி பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# முறைப்பாட்டாளரை மிரட்டக் கூடாது பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எச்சரிக்கை



பொலிஸ் செல்வாக்கை பயன்படுத்தி முறைப்பாட்டாளரை மிரட்டக் கூடாதென பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான வசந்த பிரேமகுமாரவுக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஏ.எம்.சஹாப்தீன் கடுமையாக எச்சரித்தார்.

முறைப்பாட்டாளரான வர்த்தகர் அமந்த நாணயக்காரவை மிரட்டிப் பணம் பறித்ததாகக் கூறப்படும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்த பிரேமகுமார சார்ஜன்ட் சரத் சொய்ஸா, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் நதீ குமாரி விஜேசிங்க ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தொலைக்காட்சி தொகுப்பாளர் நதீ குமாரி முறைப்பாட்டாளருடன் கள்ள உறவு கொண்டிருந்தார்.

நதீ குமாரி தனக்கும் முறைப்பாட்டாளருக்குமிடையிலான உறவை அவரது மனைவிக்கு கூறப்போவதாக மிரட்டி பணம் பறித்துவந்துள்ளார். இறுதியில் நதீ குமாரியின் தொல்லை தாங்க முடியாத வர்த்தகரான அமந்த நாணயக்கார பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இவ்விடயத்தை விசாரித்த பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சார்ஜண்ட் மற்றும் நதீகுமாரி உடன் சேர்ந்து முறைப்பாட்டாளரிடமிருந்து பணம் பறித்ததாக கூறப்பட்டது.


இவர்கள் 3.5 மில்லியன் ரூபாவை மிரட்டி பறிக்க முயன்றமை தொடர்பாக கொழும்பு குற்றச்செயல் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்டனர். தலா 1 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வாழ்க வளமுடன்
பெயர் : ச.ஹஸ்ராஷமா
முகவரி : 355, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
அகவை 1 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# நீரிழிவு நோயால் வருடாந்தம் 600 பேர் கால்கள் இழப்பு

நீரிழிவு நோய் காரணமாக வருடாந்தம் சுமார் 500 முதல் 600 பேர்வரை கால்களை இழக்கின்றனர் என சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,





உல்க சனத்தொகையில் 246 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வெண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டளவில் 380 மில்லியனாக அதிகரிக்கும் அபாயம் உள்ளது. உலக சனத்தொகையில் ஒவ்வொரு 10 வினாடிக்கும் இருவர் நீரிழிவு நோயாளியாகின்றனர்.

இலங்கையில் 20 இலட்சம் நீரிழிவு நோயாளிகள் உள்ளனர். அது தவிர மேலும் 20 இலட்சம் பேர் இந்நோயின் தாக்கத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இலங்கையில் நீரிழிவு நோயினால் வளர்ந்தவர்கள் மாத்திரமின்றி சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிராமப் புற மக்களில் 10 வீதமானோரும் நகரப் புற மக்களில் 15 வீதமானோரும் தற்போது இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 10 வீதம் முதல் 15 வீதமான பாடசாலை மாணவர்களும் அடங்குவர் என்பது சுடடிக்காட்டத்தக்கது.

முறையற்ற உணவுப் பழக்கம், தேகப்பயிற்சி இன்மை மற்றும் ஓயவற்ற வேலைப்பளுக்களால் ஏற்படும் அழுத்தங்கள் என்பவற்றால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சு இந் நோயைக கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2050ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் 64 வீதமானோர் நீரிழிவின் தாக்கத்திற்கு ஆளாகுவர் என உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது

வாழ்க வளமுடன்
பெயர் : க.அகாஷ்
முகவரி : 28/4 ஹெலன்காம்ப் வீதி மானிப்பாய்
அகவை 8இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென் வாழ்த்துகின்றோம்







நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பொன்விழா நிகழ்வில் லயஞானபூபதி-மிருதங்க கலாகீர்த்தி பிரமஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா குழுவினர் இசைக்கச்சேரி நிகழ்த்துவதனைக் காணலாம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
பிறந்த ஆண்டு :- ..........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

# ஜெனிவா பேச்சுவார்த்தையில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது

## ஈரானின் இணை வெளியுறவுத் துறை அமைச்சர்



ஜெனிவா பேச்சுவார்த்தையில் நம்பிக்கையின்மை தெரிவதாக ஈரானின் இணை வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்கி தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்தும், அந்நாட்டின்மீதான பொருளாதாரத் தடைகளை விலக்குவது குறித்தும் ஜெனிவாவில் ஆறு வல்லரசு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ரஷ்யா மற்றும் ஜேர்மனியின் அரசியல் தலைவர்கள், ஈரானின் அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

ஈரானின் தலைமைப் பேச்சுவார்த்தையாளரும், இணை வெளியுறவுத்துறை அமைச்சருமான அப்பாஸ் அரக்கி இந்த ஒப்பந்தம் நம்பிக்கை இல்லாமை மற்றும் பெரிய வேறுபாடுகள் காரணத்தினால் முன்னேற்றம் காணாமல் இருக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளார்.

ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் குறித்த உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே ஒப்பந்தம் முடிவுக்கு வரும் என்று அரக்கி தெரிவித்துள்ளார்.

சென்ற முறை நடைபெற்ற கூட்டத்தில் இறுதி நேரத்தில் வல்லரசு நாடுகள் தங்களுடைய விதிமுறைகளைக் கடுமையாக்கியதால் இந்தமுறை நடைபெறும் கூட்டத்தில் நம்பிக்கை இல்லாமை தொடர்ந்துள்ளது என்று அரக்கி குறிப்பிட்டுள்ளார். நம்பிக்கையை பெறமுடியாவிட்டால் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளைத் தொடரமுடியாது என்று அவர் கூறினார்.

மேற்கத்திய நாடுகள் ஈரானின் அணுசக்தி செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து சந்தேகம் எழுப்பிவருவதை ஈரான் வன்மையாக மறுத்துள்ளது. இரண்டு அணிகளுக்குமிடையே பெரிய வேறுபாடுகள் இன்னமும் இருந்து வரும் நிலையில், ஒப்பந்தத்தை மேற்கொளவது கடினமான பணியாகும் என்றார்.

ஆயினும், நாளை நடைபெறும் பேச்சு குறித்து நம்பிக்கை தெரிவித்த அவர் தன்னுடைய சக உறுப்பினர்களையும் வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஊடகங்களை அலங்கரித்த இளவரசியின் குட்டைப்பாவாடை





இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவி கேட் மிடில்டன் குழந்தை பெற்ற பின்னர், பொதுநிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்து வந்தார்.

இந்நிலையில் லண்டனில் உள்ள பாடசாலை விழா ஒன்றில் பங்கேற்க வந்தவர் அப்போது இளவரசியை வரவேற்க சிறுமி ஒருவர், பூங்கொத்தை அளித்த போது அதை பெற்றுக்கொள்ள அவர் குனிந்தார். அந்த நேரம் பார்த்து வீசியடிதத சுழற் காற்றில் குட்டைப் பாவாடை விரிக்கப்பட்ட குடைபோல மேல் 'நோக்கி பறந்தது.

இந்த காட்சியை படம் பிடிக்க போட்டோ கிராபர்களுக்குள் கடும் போட்டா போட்டியும், தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. உடனே சுதாகரித்துக்கொண்ட கேட் மிடில்டன், இடது கையால் சரி செய்து விட்டார்.

இது லண்டன் ஊடகங்கள் மட்டுமின்றி, சர்வதேச ஊடகங்களிலும் கூட வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகச் செய்திகள்

# மீண்டும் தனது கன்னித்தன்மையை விலை பேசும் பிரேசில் மாணவி



பிரேசில் நாட்டைச் சேர்ந்த மாணவி கேத்ரினா மிக்லி ஒரினி (வயது 21) என்பவர் தனது கன்னித் தன்மையை விலைபேசியுள்ளார்.

இவர் கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் தனது கன்னித்தன்மையை விலைபேசி ஒன்லைன் மூலம் ஏலம் விட்டார். இந்தப் போட்டியில் ஜப்பான் நாட்டை சேர்ந்த நட்சு என்ற கோடீஸ்வரர், அமெரிக்காவைச் சேர்ந்த ஜேக்மில்லர், ஜேக்ரை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ருத்ரா ஜட்ட்ர்ஜி ஆகியோரிடையே கடுமையான போட்டி இருந்தது.

கடைசியாக ஜப்பான் கோடீஸ்வரர் பேரம் பேசியதால், ஒப்பந்தம் ஏதும் ஏற்படாமல் முறிந்து போனது.

தற்போது மீண்டும், கன்னித்தன்மையை இணையத்தளத்தின் மூலம் விலை கோரி இருககிறார். இதில் எந்த நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும் விலை பேசலாம் என்றும், ஒரு மில்லியன் பவுண்ட் வரை விலை போகலாம் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசத்துரோக வழக்கில் மீண்டும் கைதாவார் முஷாரப்



வெளிநாட்டில் தங்கியிருந்த பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக பாகிஸ்தான் வந்தார். ஆனால அவரை தேர்தலில் போட்டியிட தேர்தல் குழு அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் அவர் மீது கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இது தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஆனால் அனைத்து வழக்குகளிலும் தற்போது விடுதலை பெற்றுள்ளார். ஆனாலும் அவர் வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதேவேளை முஷாரப் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் இராணுவத் தளபதியாக இருந்த போது இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியை கைப் பற்றியதற்காக இந்த வழக்கை பதிவு செய்துள்ளனர்.

எனவே அவரை இந்த வழக்கில் கைது செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு சட்டத்தரணி முனீர் மாலிக் தெரிவிக்கையில் முஷாரப் கைது செய்யப்பட வாய்ப்பு உள்ளது முஷாரப் மீது இந்த வழக்கில் போதுமான ஆதாரங்கள் உள்ளன. எனவே அவர் இதில் இருந்து தப்ப முடியாது. அவருக்கு மரண தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது. குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாவது நிச்சயமாகக் கிடைக்கும் என்று கூறினார்.

# இளம் வயதில் சம்பாதிப்பதில் சீனர்கள் முதலிடம்

குறைந்த வயதில், அதிக கோடீஸ்வரர்களை உடைய நாடுகளின் பட்டியலில், சீனா முதலிடம் வகிக்கிறது.

சர்வதேச அளவில், ஒவ்வொரு ஆண்டும், கோடீஸ்வரர்களின் பட்டியல் வெளியிடப்படுகிறது. இந்த ஆண்டு வெளியான பட்டியலில் 515 கோடீஸ்வரர்களுடன் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தது.

இந்தியாவைச் சேர்ந்த 103 கோடீஸ்வரர்களின் பெயர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சராசரி வயதின் அடிப்படையில், எந்த நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர்கள் இளம் வயதினர் என்ற பட்டியலும் வெளியாகியுள்ளது. இதில் சீனா முதலிடம் பிடித்துள்ளது.

சீனாவில் மொத்தம் 157 கோடீஸ்வரர்கள் உள்ளனர். அவர்களின் சராசரி வயது 53. இவர்களில் 90 சதவீதம் பேர், தங்கள் சொந்த உழைப்பில் சொத்துக்களை சம்பாதித்துள்ளனர். ஐந்து சதவீதம் பேர் பரம்பரை சொத்தின் மூலம் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். மீதமுள்ள ஐந்து சதவீதம் பேர் தங்களுக்குக் கிடைத்த பரம்பரை சொத்தை, பலமடங்கு பெருக்கி கோடீஸ்வரர் ஆகியுள்ளனர்.



இந்திய கோடீஸ்வரர்களில், 47 சதவீதம் பேர் மட்டுமே தங்கள் சொந்த உழைப்பில் சொத்துச் சேர்த்துள்ளனர். 19 சதவீதம் பேர், பரம்பரை சொத்துக்களின் அடிப்படையில் கோடீஸ்வரர் ஆகியுள்ளனர். மீதமுமள்ள 34 சதவீதம் பேர் பூர்வீக சொத்துக்களை தங்கள் உழைப்பின் மூலம் பெருக்கி, கோடீஸ்வரர் ஆகியுள்ளனர். இந்திய கோடீஸ்வரர்களின் சராசரி வயது, 63 ஆக உள்ளது. இது இந்தியர்களை விட சீனர்கள் குறைந்த வயதில் அதிகம் பணம் ஈட்டும் திறன் பெற்றிருப்பதை காட்டுகிறது.


அமெரிக்க கோடீஸ்வரர்களின் சராசரி வயது 67 ஆகவும், கனடாவைச் சேர்ந்த கோடீஸ்வரர்களின் சராசரி வயது, 66 ஆகவும் உள்ளது. சீனாவிற்கு அடுத்தபடியாக ஐக்கிய அரபு எமிரேட்சைச் சேர்ந்த, கோடீஸ்வரர்களின் சராசரி வயது 57 ஆக உள்ளது. உலக அளவில், கோடீஸ்வரர்களின் சராசரி வயது 62 ஆக உள்ளது.

# சூரியசக்தி மின்நிலையம்

உலகின் கூரையான திபெத்தில் சூரியசக்தி மின்நிலையத்தை சீனா அமைத்து வருகின்றது. இந்தப் பகுதி வருடத்தில் 3000 மணி நேரத்திற்கு அதிகமாக சூரிய ஒளி சக்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கு இந்திய எல்லையோரம் அமைந்துள்ள உலகிலேயே மிக உயரமான ந்கரி என்ற இடத்தில் சூரியசக்தி மின நிலையத்தை சீனா அமைத்து வருகிறது.

கடல் மட்டத்திலிருந்து 4,270 மீற்றர் உயரத்தில் 24 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு வரும் இந்த மின் திட்டத்தின் மூலம் தினமும் 10 மெஹா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று கூறப்படுகிறது. இந்த மிகப்பெரிய பி.வி. மின்சார உற்பத்தி நிலையம் ஜம்மு காஷ்மீர் மாநில எல்லை கட்டுப்பாட்டு கோட்டு அருகே உள்ளது.

# எரிமலை சீற்றத்தின் எதிரொலி ஜப்பானுக்கு அருகில் புதிய தீவு



எரிமலைகள் தொடர்ந்து வெளியேற்றும் குழம்புகள் படிந்து, டோக்கியோவின் தென் கிழக்கே புதியதீவு ஒன்றை உருவாக்கியுள்ளன.

இத்தகவலை ஜப்பானிய கடலோரக் காவல்படை தெரிவித்துள்ளது. மனிதர்கள் நடமாட்டமற்ற போனின் தீவுகள் என்றழைக்கப்படும் ஒகசவாரா தீவுத் தொடரின் அருகில் நிஷிநோஷிமா கடற்கரையை ஒட்டியுள்ள கடற்பரப்பில் இந்தத் தீவு அமைந்துள்ளது.

ஜப்பானின் கடலோரக் காவல்படை மற்றும் வானிலை ஆய்வு மையத்தின் ஆலோசகர்கள் இந்தப் பகுதிக்குச் சென்று ஆய்வு செய்துள்ளனர். சுமார் 200 மீற்றர் விட்டம் கொண்டதாக இந்த தீவு அமைந்துள்ளது என்று அவர் கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று சீற்றத்தின் விளைவாக பாகிஸ்தானிற்கு அருகிலும் சமீபத்தில் இரண்டு குட்டித் தீவுகள் தோன்றின.

நாளடைவில் தானாகவே இத்தீவுகள் மறைந்துவிடும் அல்லது அப்படியே கடினப்பட்டு இறுகி விடும் என்றும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் பேதங்களுக்காக அபிவிருத்தியை கைவிட முடியாது



வட மாகாணத்தின் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பேரில் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கே அதிகப்படியான விருப்பு வாக்குகளை மக்கள் வழங்கியிருந்தார்கள்.

அந்த ஆணைக்கே மத்திய அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள மூத்த அமைச்சர்களில் ஒருவராகவும், இந்த மாகாணத்துக்கான அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த நாடாளுமன்றத் தேர்தல்வரை இதுதான் நிலைமை.

இப்போது மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று முதலமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதால், இதுவரை ஆளுனர் வகித்த மாகாணத்தின் அபிவிருத்திக் குழுவுக்கான இணைத் தலைமைப் பதவியானது இனி முதலமைச்சருக்கே இருக்கும்.

முதலமைச்சரை அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவராக ஜனாதிபதி அவர்கள் நியமித்து அதற்கான உத்தியோகபூர்வ கடிதமும் அனுப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் கட்டுமானப்பணிகள் யாவும் மகிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன. எனவே எமது வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருக்கே இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்து தெரிவிப்பதோடு

மகிந்த சிந்தனையை பயன்படுத்தி எமது மாகாணத்தை அபிவிருத்தியாலும், மீள் கட்டுமானத்தாலும் தூக்கி நிறுத்த வேண்டிய யதார்த்தத்தை முதலமைச்சர் புரிந்து கொண்டிருப்பார் என்றே நம்புகின்றேன். ஆனால் கூட்டமைப்பினர் முதலமைச்சரை நடைமுறைச் சாத்தியமான பாதையில் செயல்படுவதற்கு விடுவார்களா? என்பதே அவருக்கு தடையாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலிலேயே நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு நிலைமையைப் புரிந்து கொண்டு அரசியல் காரணங்களுக்காக எமது மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிகள் முடக்கப்பட்டு விடக்கூடாது என்பதாலுமே எமது தலைவர் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் என்ற ரீதியில் கூட்டங்களை நடத்தினார். உரிய அதிகாரிகளும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கினார்கள்.

தனது தோளிலே அரிசி மூடை சுமந்து அகதியாக நின்ற எமது மக்களுக்கு உணவளிக்க பாடுபட்ட எமது தலைவரைப் பார்த்து ஆணை பற்றியும், மக்கள் ஆணையை இழந்தவர் என்றும் கேள்வி எழுப்புவதற்கு நேற்று அரசியலுக்கு வந்த எந்தப் பிரகிருதிக்கும் அருகதை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்றொழில் திணைக்களத்திற்கு நால்வர் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்திற்கு புதிதாக நான்கு கடற்தொழில் பரிசோதகர்கள் கடற்தொழில் நீரியல் வள அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட இந் நான்கு கடற்தொழில் பரிசோதகர்களும், நேற்று யாழ். கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்த உதவிப்பணிப்பாளர் தமது அலுவலகத்திற்கு எட்டு கடற்தொழில் பரிசோதகர்கள் தேவையென அமைச்சிற்கு அறிவித்திருந்ததாகவும் நீண்டகாலமாக இயங்கிவந்த இவ்வெற்றிடத்திற்கு தற்சமயம் நான்கு பேர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார் மேலும் நான்கு வெற்றிடங்கள் உள்ளதாகவும் தெரிவித்தார். இவர்களுடன் சேர்ந்து மொத்தம் 11 கடற்தொழில் பரிசோதகர்கள் தற்சமயம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் கடற்தொழில் திணைக்களத்தின் நடவடிக்கைகளை திறம்படமேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களைவிட யாழ். மாவட்டம் கடற்தொழிலாளர்களை அதிகமாகக்கொண்ட மாவட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.(பா)

# வடக்கில் கடல்வளம் அழிவடையும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து நண்டு மற்றும் கடல் உணவுகள் ஏற்றுமதி செய்யப்படுவதால் யாழ்குடா நாட்டின் கடற்பகுதியில் நண்டுகளின் பெருக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக யாழ். கடற்தொழில் நீரியல்வள திணைக்கள பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வெளிநாடுகளுக்கு நண்டு ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிலையில் நண்டு பிடிப்போர் சிறிய நண்டுகளையும் பிடிப்பதால் நண்டு இனம் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் நண்டு இனப்பெருக்க காலத்தில் பிடிக்கப்படுவதாலும், எதிர்காலத்தில் நண்டு இனம் அருகக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதால் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விரைவில் இதற்கான ஏற்பாடுகளை அமைச்சினூடாக மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மாவட்ட செயலர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் பிரஜைகொலை; சந்தேக நபர்களுக்கு பிணை

பிரிட்டிஷ் பிரஜை குராம் ஷேக் கொலை தொடர்பில் கைதான தங்காலை பிரதேச சபைத் தலைவர் சம்பத் விதான பத்திரன உள்ளிட்ட 6 பேரை கொழும்பு மேல்நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

ஆறு பேர் மீதும் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 6 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போதே நீதிபதி அவர்களை பிணையில் செல்ல அனுமதித்ததாக சந்தேக நபர்கள் சார்பில் வாதிட்ட சட்டத்தரணி ஷாப்திக வெல்லப்புலி பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 6 பேரையும் பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபணை இல்லையென அரசதரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி, ஒவ்வொரு நபரையும் தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அதேபோல், குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடைசெய்தும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாட்சியாளர்களை அவர்கள் அச்சுறுத்தக்கூடாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாட்சியாளர்கள் அச்சுறுத்தப்படுவதாக முறைப்பாடுகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் பிணையை ரத்துசெய்துவிட்டு, விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிபதி 6 பேருக்கும் எச்சரிக்கை விடுத்தார். அதன்பின்னர், வழக்கு விசாரணை எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# மோட்டார் சைக்கிளில் சென்றவரை மோதித்தள்ளியது பொலிஸ் பிக்கப்

(வடமராட்சி)

பருத்தித்துறை அல்வாய் தெருமூடி மடத்தடிப்பகுதியில் பொலிஸ் பிக்கப் வாகனமும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் புலோலி தெற்கு மந்திகையைச்சேர்ந்த நவரட்ணம் செந்தில்குமார் (வயது28) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி நோக்கி பொலிஸ் பிக்கப்சென்று கொண்டிருந்த நிலையில் மந்திகையிலிருந்து நெல்லியடி நோக்கி மோட்டார் சைக்கிளில் குறித்த நபர் சென்று கொண்டிருந்தார். இதில் அல்வாய் தெருமூடி மட வீதியால் குறித்த நபர் வீதியின் கரையால் சென்று கொண்டிருந்த சமயம் பின்னால் வந்த பொலிஸ் பிக்கப் இவரை முந்திச் சென்றவேளையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த நபர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நெல்லியடி பொலிஸார் குறித்த நபரின் மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றுள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

### கமரூனின்...

மன்மோகன்சிங்கலந்து கொள்ளாமல் விட்டதனால் இருதரப்பு உறவுகளிலும் பாதிப்பு எதுவும் ஏற்படாது இரண்டுநாடுகளுக்குமிடையிலான உறவுகள் முறியக்கூடியசாத்தியம் கிடையாது இலங்கையும். இந்தியாவும் முரண்பட்டு செல்ல முடியாது என்பதுடன், உள்நாட்டு விவகாரங்களின் அடிப்படையில் இலங்கையுடனான உறவுகள் நிர்மாணிக்கப்படமாட்டாது. தென்னாசியப் பிராந்திய வலய நாடுகளின் ராஜதந்திர அணுகுமுறை வித்தியாசமானது இவ்விரு நாட்டின் சமூகங்களுக்குமிடையில் பல்வேறு எதிர்பார்ப்புகள் நிலவுகின்றன. இந்த எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் வகையில் இந்திய அரசாங்கம் இலங்கையுடன் இராஜதந்திரசெயற்பாடுகளை முன்னெடுக்கும்.

அதேநேரம் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை பிரிட்டனின் அணுகுமுறைக்கு ஒத்தவழியில் இந்தியா ஒருபோதும் வெளிப்படுத்தாது என இந்திய அதிகாரி தெரிவித்துள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புலிகளுக்கு...

தேவையற்றது . அதனை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம். அவற்றை நாம் இலகுவாக அகற்றி விடுவோம் .

நாங்கள் 30 வருடங்களாக துயரப்பட்டுவிட்டோம் . இனி ஒருபோதும் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க மாட்டோம் . காணிகளை பற்றி குறிப்பிடுவதானால், இராணுவமுகாம்கள் எமது காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் அதிகமானவை அரச காணிகளாகும் . இராணுவத்திற்கு தேவையான இடங்களை அமெரிக்காவோ இங்கிலாந்தோ அல்லது வடக்கின் முதலமைச்சரோ தீர்மானிக்க முடியாது.

அதனை தீர்மானிக்க வேண்டியவர்கள் ஜனாதிபதி , பாதுகாப்புச் செயலாளர் அல்லது முப்படைத்தளபதிகள் மட்டுமே என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

### அமெரிக்கா...

என்று தெரிவித்துள்ளார்.

தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலராகப் பதவி வகித்து வந்த, றொபேட் ஓ பிளேக்கிற்குப் பதிலாகவே, நிஷா தேசாய் பிஸ்வால் பதவியேற்றுள்ளார்.

### தாய்மொழியில்...

இது நடைமுறையில் உள்ளது. பொலிஸாருக்கான தமிழ் மொழி தேர்ச்சி தற்போது நடைபெற்றுவருவது சிறந்தவிடயம் இது. போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து எமது குழுவிற்கு கிடைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொலிஸ் மா அதிபருடன் நாம் கூட்டங்களை நடாத்தி இவற்றிற்கு தீர்வு காண்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ)

### சர்வதேச...

ஒருவர் இலங்கையின் வடக்கிற்கு விஜயம் செய்த முதல் சந்தர்ப்பமாக அது அமைந்தது.

பிரதமரின் தீர்மானம் காரணமாகவே ஊடகவியலாளர்களுக்கு அங்கு சென்று விடயங்களை வெளிப்படுத்த முடிந்ததுடன் சர்வதேசத்துக்கும் காணாமல் போன மற்றும் இறந்துபோன மக்களின் விடயங்களை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லமுடிந்தது என்று பரோனெஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானிய அமைச்சர் மைக்கல் பாலொன் பொதுச்சபையில் உரையாற்றும் போது பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு ஆயுத ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளமையை சுட்டிக் காட்டினார்.

### வடகிழக்கில்...

சரியாகத் தெரிவிக்கப்படவில்லை எனக் கூறினார்.

விதவைகளின் செயலணிகள் பற்றிய விழுதின் செயல்திட்ட அறிக்கை, மாவட்ட தலைவியர்களின் அனுபவப் பகிர்வுகள், "அமரா" குடும்பத் தலைமைப் பெண்களின் ஒன்றியம் என்பன அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்சளியன், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ. அருள்மொழி, விழுதுகள் அமைப்பின் ஆலோசகர் காசுபதி நடராசா, திட்டமிடல் உத்தியோகத்தர் ஹரி இந்துமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு

# உதாரண புருஷர் சேர் பொன்.இராமநாதன்




(மாத்தறை)

இனங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வுக்கும் அதனூடான நட்புக்கும் அதன் வளர்ச்சிக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணமாக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மாவத்தை தென் பகுதியில் திறந்து வைக்கப்படுகிறது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மாத்தறை நகரில் அமையப் பெற்றிருந்த கொட்டுகொட வீதியானது சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மாவத்தை என்ற பெயரில் மாற்றம் செய்யப் பட்டது.

இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தொரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சேர்.பொன் இராமநாதன் அவர்கள் அக்காலகட்டத்தில் சிங்கள் மக்கள் ஆங்கிலேயர்களால் சிறை வைக்கப் பட்டிருந்த போது அவர்களது விடுதலைக்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். இதற்கென அவர் இங்கிலாந்து சென்று நாடு திரும்பியிருந்த நிலையில் சிங்கள மக்கள் அவரை குதிரை வண்டியில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

அத்தகைய ஒரு இலங்கைத் தலைவரை தென்பகுதி மக்களும், மாத்தறை மாநகர சபையினரும், இவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி இம்முயற்சியை முன்னெடுத்திருக்கும் அமைச்சர் டலஸ் அழகப்பெருமானும் பாராட்டத்தக்கவர்கள்.

இவ்வாறான முயற்சிகளின் மூலம் சகோதர இனங்களிடையே நட்புறவுப் பாலத்தை அமைப்பதன் ஊடாக வீண் சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் இன்றிய சுமுகமானதொரு நிலையை தோற்றுவிக்க இயலும். அந்த வகையில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கொண் டுள்ள இம் முன் முயற்சி அனைத்து தரப்பினர்களுக்கும் ஒரு முன் உதாரணமாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டில் வாழுகின்ற சகோதர இனங்களாகிய நாம் ஒருவரது மொழியை இன்னொருவர் அறியாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றோம். இது துரதிஸ்டவசமானது.

எங்கேயோ, எதிலோ நடந்திருக்கும் தவறுகளே இந்த வரலாற்று ரீதியான பாரிய தவறுக்கு காரணமாகியுள்ளது.

கடந்த காலத்தில் வன்முறை வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த வடக்கு இளைஞர்கள் தற்போது தென்பகுதிக்கு வருகின்ற போது அவர்களை எமது மக்கள் அன்புடன் வரவேற்கிறார்கள். நாங்கள் வடக்கு ப்குதிக்கு போனால் அங்குள்ள மக்கள் எங்களை அன்புடன் வரவேற்கிறார்கள். இந்நிலை தொடரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர், மாத்தறை மாநகர பிரதிமுதல்வர், தென்மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அரசின் இயலாமை அம்பலம்; ஐக்கிய தேசியக் கடசி சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் இயலாமை அம்பலமாகியுள்ளது என நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

2014 ஆம் ஆண்டுக்காக வரவு செலவுத் திட்டமானது மக்கள் மீது வரிச் சுமையை திணிக்கும் வகையில் அமைந்துள்ளது என அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களினால் எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இது வல்ல. சாதாரண மக்களின் உணவுப் பொருட்கள் மீதும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் நிறுத்தப்பட்ட ஓர் வரவு செலவுத் திட்டமாக இது வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

தனியார்துறை ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் இயலாமை அம்பலமாகியுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் வீழ்ச்சி வெளியாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாமர மக்களுக்கு பயனற்ற “பட்ஜட்”

## ஜே.வி.பி.சாடல்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒரு வெறும் ஆவணமாகும். எந்தவொரு பிரயோசனத்துக்குமற்ற அறிவிப்பாகும். இந்த திட்டத்தால் பொதுமக்களுக்கு எந்தவொரு நன்மையும் இல்லை. இந்த அரசாங்கத்துக்கு குறுகிய காலம் அல்லது நீண்ட காலத்துக்கான பொருளாதார தீர்வு இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த திஸாநாயக்க எம்.பி,

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்காக அதிகரிக்கப்பட்டுள்ள படியானது ஒரு நாளைக்கு இரண்டு வெற்றிலைக்கூறுகளை வாங்குவதற்கே போதுமானதாக உள்ளது.

இதேவேளை, விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தைக் குறைத்து கெசினோவுக்கான வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. தொலைபேசிக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

# விக்கிரகங்கள் திருட்டு; சூத்திரதாரி மடக்கிப்பிடிப்பு

முல்லைத்தீவு இருட்டு மடுப்பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றில் கொள்ளையிட்ட ஒருவரை அப்பகுதி மக்கள் மடக்கி பிடித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

முல்லைத்தீவு உடையார் கட்டு கிராம அலுவர் பிரிவுக்குட்பட்ட இருட்டு மடு கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நபர் ஒருவர் பிள்ளையார் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் மற்றும் மணி, தீபங்கள், குத்துவிளக்குகள் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையடித்துச் செல்வதை அப்பகுதி மக்கள் அவதானித்ததையடுத்து குறித்த நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர் முல்லைத்தீவு மாங்குளத்தை சேர்ந்தவர் எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மரண அறிவித்தல்



லயன்

## குழந்தைவேலு நடராசா

(லயன் கழக 306B1 மாவட்ட தலைவர், தெண்மராட்சி சமுர்த்தி மகாசங்கத் தலைவர)

கச்சாய் வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், நகுலகிரி கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு நடராஜா (20.11.2013) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் அமரர் குழந்தைவேலு ஈஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான செல்லையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் மற்றும் நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும், விநாயகமூர்த்தி, ஸ்ரீரங்கநாதன் தவமணி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கொடிகாமம் பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
நகுலகிரி, கச்சாய் வீதி,
கொடிகாமம்.
தொ. இல. 077 667 939
077 429 3432
(இ)

# முறையீடு செய்தால் நடவடிக்கை நிச்சயம்

மனித உரிமை ஆணைக்குழுவிற்கு என குறிப்பிட்டு முறையிடப்படும் முறையீடுகள் தவிர்ந்த வேறு பிரதியிடல்களுக்கு நாம் நடவடிக்கை எடுக்கமுடியாது என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

சில அமைப்புக்கள் தொழிற்சங்ககங்கள் தாம் தமது முறையீடுகளை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பும்போது பிரதிகளில் ஒன்றை எமக்கு அனுப்புவது வழமை. ஆனால் அதற்கு நாம் நடவடிக்கை எடுக்கமுடியாது.

எமது ஆணைக்குழுவின் பெயரிட்டு முறையிடப்படும் முறைப்பாடுகளுக்கே நாம் எமக்குள்ள சட்டவரையறைகளுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்ளமுடியும் என அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற சிவில் சமூகத்தினருடனான ஒருங்கிணைப்பு செயலமர் வின்போது கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ)

# இளவயதுக் கர்ப்பம்; கட்டுமீறும் அபாயம்

நாட்டின் சில மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான சிறுபராய கர்ப்பிணிகள் பதிவாவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ' திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்த வருடத்தில் பிரதேச ரீதியாக பதிவாகிய தகவல்களை ஆராய்ந்து இதனை உறுதிசெய்துகொண்டதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் யமுனா பெரேரா குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அடுத்த வருடத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மொனராகலை, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் சிறுபராய கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து அதிகளவில் பதிவாகியுள்ளன.

இதன்பொருட்டு அந்தந்த பிரதேசங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டு உரிய தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்விக்கான உதவிகளுக்கு இதுவரை சுமார் 3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# உயர் கல்வி பிரச்சினைகளுக்கு தீர்வு எதுவும் இல்லை

## பல்கலை தொழிற்சங்கம் சாடல்

பல்கலைக்கழக கல்வி தொடர்பில் க்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க இம்முறை வரவு - செலவுத் திட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் எதிர்கால நோக்கு மற்றும் கல்வியின் பெறுமதி, தரம் குறித்தும் அதில் மாற்றங்கள் செய்வது குறித்தும் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

இதேவேளை, வரவு-செலவுத் திட்டத்தில் தமக்கும் எதுவித நிவாரணமும் கிடைக்கவில்லை என அனைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ஆர்.எம்.சந்திரபால தெரிவித்தார்.

பல்கலைக்கழக விடுதிகளை அமைப்பதற்கும் புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் நேற்றைய வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. மேலும் நேற்றைய வரவு - செலவுத் திட்டத்தில், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கல்விக் கொடுப்பனவு அடிப்படை சம்பளத்தில் 5 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.